# ரகுவம்ச மகா காவ்யம்

(மகாகவி காளிதாஸர் இயற்றியது)

முதல் ஸர்க்கம்

தமிழுரையாசிரியர்
வங்கீபுரம் ஸ்ரீ வேங்கடராகவாச்சாரியர்

வெளியிடுவோர்
லிட்டில் ப்ளவர் கம்பேனி
விழுப்புரம்

[... பெற்றது]   1949   [விலை ரூ. 0-7-6

T.9916

# முன்னுரை

---

ரகுவம்சத்தின் சில ஸர்க்கங்களுக்கு நான் தமிழில் வெளியிட்ட உரையைக் கண்டவர்களில் பலர், மற்ற ஸர்க்கங்களுக்கு [illegible] ருக்கும் பயன்படும் வகையில் தெளிவான உரை ஒன்று தமிழில் எழுதி வெளியிட வேண்டுமென்று கடந்த எழெட்டு வருஷங்களாக நேரிலும் கடிதங்கள் மூலமாகவும் எனக்கு அறிவித்தனர்.

அதை அனுசரித்து இவ்வுரை எழுதப்பட்டு வெளிவருகின்றது. ஸம்ஸ்க்ருத காவ்யங்களைப் படித்து அனுபவிக்க இவ்வுரை உதவுமென்ற நம்பிக்கையுடன் எழுதப்பட்டிருக்கிறது. படிப்பவர்களின் ஸௌகர்யத்தைக் கருதி, ஒவ்வொரு சுலோகமும் பதம் பிரித்து அச்சிடப் பெற்றுள்ளது.

ரகுவம்சத்திற்கு உரைகள் பல இருப்பினும் மல்லிநாதர் எழுதிய ஸஞ்ஜீவினியே அதிகம் பிரசித்தி பெற்றிருக்கின்றது. அதைத் தழுவியே இத்தமிழுரையும் உ[illegible] மல்லிநாதர் தமது உரையைப் பற்றிக் கூறும்பொழுது "சுலோகத்தில் இல்லாத பொருளைச் சிறிதும் எழுதவில்லை; படிப்பவர்களுக்குத் தேவையற்றதும் சொல்லப்படவில்லை," என்கிறார். அது இத்தமிழுரைக்கும் பொருந்தும்.

மற்றை ஸர்க்கங்களின் உரையும் சீக்கிரத்தில் வெ[illegible] வரும்.

மாம்பலம் }
1—7—1946 }

வங்கீபுரம்
வேங்கட[illegible]

|| श्रीः ||

# || रघुवंशः ||

## प्रथमस्सर्गः

### முதல் ஸர்க்கம்.

கவி, பார்வதியையும் பரமசிவனையும் வணங்கிப் பின், தமது விநயத்தை வெளியிட்டு, ஸூர்யவம்சத்து மன்னர்களின் குணதிசயங்களைக் கூறுகின்றார்; "ஸூர்யபுத்திரரான வைவஸ்வதமநு அரசர்களில் முதல்வர்; அவரது வம்சத்தில் திலீபன் என ஒரு அரசன் தோன்றினன். அவனுக்கு மகத வம்சத்தில் பிறந்த ஸுதக்ஷிணை என்ற மனைவியிருந்தாள். அவர்களுக்கு வெருகாலம்வரை புத்திரன் பிறக்கவில்லை. ஸந்ததியில்லாததன் காரணத்தையறிய விரும்பித் திலீபன், மனைவியுடன் தன் குலகுருவான வஸிஷ்டருடைய ஆச்ரமம் சென்று வினவ, அவர், காமதேனுவை அரசன் அவமதித்ததால் சந்ததி உண்டாகவில்லை என்பதைக் கூறினர். மேலும், தமது ஆச்ரமத்திலுள்ளதும் காமதேனுவின் பெண்ணுமான நந்தினியைப் பூஜித்தால் அதன் அருளால் அரசனுக்குப் புத்திரன் பிறப்பான் என்பதும் கூறி, நந்தினிக்குச் சுச்ரூஷை செய்யவேண்டிய வகையையும் சொன்னர். அரசனும் அவர் கூறியதை ஏற்றுக்கொண்டு ஆச்ரமத்திலேயே தங்கி இருந்தான்.

वागर्थाविव सम्पृक्तौ वागर्थप्रतिपत्तये ।
जगतः पितरौ वन्दे पार्वतीपरमेश्वरौ ॥ १ ॥

**वागर्थौ इव** - சொல்லும் பொருளும்போலே, **सम्पृक्तौ** - சேர்ந்திருப்பவர்களும், **जगतः** - உலகத்திற்கு, **पितरौ** - தாய்

தந்தையருமான, **पार्वतीपरमेश्वरौ** - பார்வதியையும் பரம சிவனையும், **वागर्थप्रतिपत्तये** - சொல், பொருள் இவைகளை அறியும் பொருட்டு, **वन्दे** - நமஸ்கரிக்கின்றேன்.

(கருத்து): பார்வதியும் பரமசிவனும் உலகத்திற்குத் தாய் தந்தையர். சொல்லும், அதன் பொருளும் சேர்ந்திருப்பதுபோல் அவ்விருவரும் சேர்ந்து இருப்பவர்கள். பக்தர்களுக்கு அருள்புரிவதில் ஒரே மனம் கொண்டவர்கள். அத்தகைய திவ்யதம்பதிகளான பார்வதியையும் பரமசிவனையும், சொல் பொருள் இவைகளுடைய அறிவை அவர்களின் அருளால் பெறவிரும்பி மஹாகவி காளிதாஸர் வணங்குகின்றார்.

क्व सूर्यप्रभवो वंशः क्व चाल्पविषया मतिः।
तितीर्षुर्दुस्तरं मोहात् उडुपेनास्मि सागरम् ॥ २ ॥

**सूर्यप्रभवः** - சூர்யனிடமிருந்து தோன்றிய, **वंशः** - வம்சம், **क्व** - எங்கே! **अल्पविषया** - சிறிதே அறிவுடைய, **मतिः** - (எனது) புத்தி, **क्व** - எங்கே! **दुस्तरं** - கடக்கமுடியாத, **सागरं** - கடலை, **मोहात्** - அறிவின்மையால், **उडुपेन** - சிறுபடகின்மூலம், **तितीर्षुः** - கடக்கவிரும்புபவனாக, **अस्मि** - இருக்கின்றேன்.

(கருத்து): "ஸூர்யனிடமிருந்து இந்த வம்சம் தோன்றியது; அவ்வம்சத்தின் பெருமை மிகச் சிறந்தது; நானோ மிகக் குறைவான அறிவுடையவன்; கடக்கமுடியாத ஸமுத்திரத்தைச் சிறுபடகின் மூலம் ஒருவன் கடக்க விரும்புவதுபோல் எனது குறைந்த அறிவினால் கடல்போன்ற இச்சரித்திரத்தைக் கூறப்போகின்றேன்."

मन्दः कवियशः प्रार्थी गमिष्याम्युपहास्यताम् ।
प्रांशुलभ्ये फले लोभाद् उद्बाहुरिव वामनः ॥ ३ ॥

**मन्दः** - குறைந்த அறிவுடையவனும், **कवियशः प्रार्थी** - கவியின் புகழை விரும்புகின்றவனுமான, **अहं** - நான், **प्रांशुलभ्ये** உயரமான மனிதனால் அடையத்தகுந்த, **फले** - பழத்தில், **लोभात्** - ஆசையினால், **उद्बाहुः** - நீட்டிய கையையுடைய, **वामनः इव** - குள்ளன்போல், **उपहास्यतां** - பரிஹஸிக்கப்படும் நிலையை, **गमिष्यामि** - அடைவேன்.

(க-து) "அறிவற்ற நான் கவியின் புகழை அடைய விரும்புகின்றேன். உயரமான மனிதன் பறிக்கக்கூடிய பழத்தை அடைய விரும்பும் ஒரு குள்ளன் கைநீட்டிக் குதிப்பானுயின் வீணே முயலுகின்ற அவனை யாவரும் பரிகசிப்பார்கள். அதுபோல் எனக்கு எட்டாத பொருளில் ஆசைவைத்து அதற்காக முயலுகின்ற நானும் பலருடைய நகைப்புக்குப் பாத்திரமாவேன்."

अथवा कृतवाग्द्वारे वंशेऽस्मिन् पूर्वसूरिभिः ।
मणौ वज्रसमुत्कीर्णे सूत्रस्येवास्ति मे गतिः ॥ ४ ॥

**अथवा** - அல்லது, **पूर्वसूरिभिः** - முன்னிருந்த பெரியோர்களால், **कृत-वाग्-द्वारे** - செய்யப்பட்ட ராமாயணம் என்னும் துவாரமுடைய, **अस्मिन्** - இந்த, **वंशे** - சூரியவம்சத்தில், **मे** - என்னுடைய, **गतिः** - போக்கு (காவ்யம்), **वज्रसमुत्कीर्णे** - வஜ்ரத்தினுல் துளை யிடப்பட்ட, **मणौ** - ரத்னத்தில், **सूत्रस्य (गतिः) इव** - நூலின் போக்குப்போல், **भवति** - இருக்கின்றது,

(க-து) "நான் காவ்யம் இயற்றும் திறமை இல்லாதவனே. ஆயினும் முன்னோர் சென்ற வழியில் சென்று எனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வேன்," என்று இச்சுலோகத்தில் கவி கூறுகிறார்.

"சூர்யவம்சம் ஒரு ரத்னம்போன்றது. அதில் வால்மீகி, ராமாயணம் என்னும் ஒரு துவாரத்தை அமைத்தார். வஜ்ரத்தினுல் துளையிடப்பட்ட ரத்தினத்தில் நூல் எளிதில் புகுந்து செல்லும். அதுபோல ராமாயணம் என்ற துவாரத்தையுடைய இச்சூர்யவம்சத்திலும் எனது நூல் செல்ல இயலும்.

"வால்மீகி இயற்றிய ராமாயணத்தின் மூலம் சூர்ய வம்சத்தின் சரித்திரத்தை நன்கு அறிந்து, இராமாயணமும் பயன்பெறும்படி, எனது காவ்யத்தை அமைப்பேன். நூலினுல் ரத்னம் பயன்படுவதுபோல், எனது நூலினுலும் ராமாயணம் பலருக்கும் பயன்படும்."

सोऽहमाजन्मशुद्धानाम् आफलोदयकर्मणाम् ।
आसमुद्रक्षितीशानां आनाकरथवर्त्मनाम् ॥ ५ ॥

**सः** - அப்படிப்பட்ட, **अहं** - நான், **आजन्म-शुद्धानां**- பிறவி முதல் பரிசுத்தமானவர்களும், **आफलोदय-कर्मणां** - பயனுண்டாகும் வரை முயற்சி உடையவர்களும், **आसमुद्र क्षितीशानां**- சமுத்திரம்வரையுள்ள நிலத்திற்கு அரசர்களாக இருப்பவர்களும், **आनाक-रथवर्त्मनां** - ஸ்வர்க்கம்வரை தேரின் வழியுடையவர்களுமான, **रघूणां** - ரகுவம்சத்தவரின், **अन्वयं** - சரிதத்தை, **वक्ष्ये** - சொல்வேன்.

இதுமுதல் 9-வது சுலோகம்வரை சேர்ந்து ஒரு வாக்யமாகும்.

(க-து) ரகுவம்சத்தில் தோன்றிய மன்னர்கள் பிறவியிலேயே பரிசுத்தமானவர்கள். அவர்கள், பலன் உண்டாகும் வரையில் முயற்சிசெய்வார்கள். அவர்களது இராஜ்யம் சமுத்ரம் வரை இருந்தது. அவர்கள் தேவலோகத்திற்கும் செல்லத் திறமை வாய்ந்தவர்கள்.

यथाविधिहुताग्नीनां यथाकामार्चितार्थिनाम् ।
यथापराधदण्डानां यथाकालप्रबोधिनाम् ॥ ६ ॥

**यथाविधि** - முறைப்படி, **हुताग्नीनां** - ஹோமம் செய்யப்பட்ட அக்னியை உடையவர்களும், **यथाकाम** - விருப்பப்படி, **अर्चितार्थिनां** - கௌரவிக்கப்பட்ட யாசகர்களை உடையவர்களும், **यथापराध** - குற்றத்திற்கு தக்கபடி, **दण्डानां** - தண்டிப்பவர்களும், **यथाकाल** - காலத்திற்கு தகுந்தபடி, **प्रबोधिनां** - அறிவு பெறுகின்றவர்களுமான, **रघूणां अन्वयं** - ரகுவம்சத்தவரின் சரிதத்தை, **वक्ष्ये** - கூறப் போகிறேன்.

(க-து) ரகு மஹாராஜனுடைய வம்சத்தில் பிறந்த மன்னர்கள் சாஸ்திரத்தில் கூறியபடி யாகம் செய்பவர்கள்; தங்களை அணுகி யாசிக்கின்றவர்களின் விருப்பத்தை கௌரவத்துடன் பூர்த்திசெய்

வார்கள். அவர்கள் குற்றங்களின் தாரதம்யத்தை நன்கு அறிந்து தண்டனை விதிப்பார்கள். காலத்திற்கு தகுந்த அறிவு அவர்களுக்கு உண்டு.

त्यागाय संभृतार्थानां सत्याय मितभाषिणाम् ।
यशसे विजिगीषूणां प्रजायै गृहमेधिनाम् ॥ ७ ॥

**त्यागाय** - கொடுப்பதற்காகவே, **सम्भृतार्थानां** - சம்பாதிக்கப்பட்ட செல்வமுடையவர்களும், **सत्याय** - உண்மைக்காக **मितभाषिणां** - அளவாகப் பேசுபவர்களும், **यशसे** - புகழின் பொருட்டு, **विजिगीषूणां**-வெல்ல விரும்புபவர்களும், **प्रजायै** - ஸந்ததியின் பொருட்டு, **गृहमेधिनां** - விவாகம் செய்து கொள்பவர்களுமான, **रघूणां अन्वयं** - ரகுவம்சத்தவரின் சரிதத்தை, **वक्ष्ये** - சொல்வேன்.

(க-து) சூர்ய வம்சத்து மன்னர்கள் தானம் செய்வதற்காகவே செல்வத்தை சம்பாதித்தனர்; அதிகம் பேசுவதினால் பொய் சொல்வதற்கு சமயம் நேருமாதலால் அவர்கள் எப்போதும் அளவாகப் பேசுவர். மற்ற அரசர்களை வெல்வது அவர்களது செல்வத்தை கொள்ளை கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தினால் அல்ல. பின் அவர்களை வென்றோம் என்ற புகழைப் பெறுவதற்கே படை எடுத்தனர். தங்களது வம்சத்தின் விருத்தியைக் கருதி மணம் செய்துக் கொண்டு கிருஹஸ்தர்களாக இருந்தனர். வாழ்க்கையிலுள்ள சுகத்தை மாத்திரம் கருதி அல்ல.

शैशवेऽभ्यस्तविद्यानां यौवने विषयैषिणाम् ।
वार्द्धके मुनिवृत्तीनां योगेनान्ते तनुत्यजाम् ॥ ८ ॥

**शैशवे** - பால்யப்பருவத்தில், **अभ्यस्तविद्यानां** - கற்கப்பட்ட கல்வியை உடையவர்களும், **यौवने** - வாலிபப்பருவத்தில், **विषयैषिणां** - சுகத்தை விரும்புவர்களும், **वार्द्धके** - கிழப்பருவத்தில், **मुनिवृत्तीनां** - முனிவர்களின் தொழிலை (தவத்தை) உடையவர்களும், **अन्ते** - முடிவில், **योगेन** - ஈசுவரத்யானத்தினால் **तनुत्यजां** - உடலை விடுபவர்களுமான, **रघूणां अन्वयं** - ரகுவம்சத்தவரின் சரிதத்தை, **वक्ष्ये** - கூறப்போகிறேன்.

(க-து) சூர்ய வம்சத்து மன்னர்கள் கல்வியை இளமையிலே கற்பார்கள். யௌவனப்பருவத்தில் பொருள்களைச் சம்பாதித்துச் சுகத்தை அனுபவிக்க விரும்புவார்கள். வயது முதிர்ந்தபின் முனிவர்களுடைய வேலையான தவத்தைச் செய்வார்கள். முடிவில் யோக முறையினால் உடலை விடுவார்கள்.

रघूणामन्वयं वक्ष्ये तनुवाग्विभवोऽपि सन् ।
तद्गुणैः कर्णमागत्य चापलाय प्रचोदितः ॥ ९ ॥

**तनुवाग्-विभवः** - குறைந்த சொற்செல்வமுடையவனாக, **सन् अपि** - இருக்கின்றவனாயினும் - நான், **कर्णं** - (எனது) காதை, **आगत्य** - அடைந்து (இருக்கின்ற), **तद् गुणैः** - ரகுவம்சத்தவரின் குணங்களால், **चापलाय** - யோசனையற்ற சிறுகாரியத்தைச் செய்யும்பொருட்டு, **प्रचोदितः** - தூண்டப்பட்டவனாய், **रघूणां** - ரகுவம்ச மன்னர்களின், **अन्वयं** - சரித்திரத்தை, **वक्ष्ये** - சொல்வேன்.

(க-து) "நான் சொல்லாகிய செல்வத்தைக் குறைவாக உடையவன். ஆயினும் ரகுவம்சத்து மன்னர்களின் நற்குணங்களைப் பல முறையும் கேட்டிருப்பதால், அக்குணங்கள் ஒரு சிறு காவ்யத்தை எழுதும்படி எனக்கு ஆவலை உண்டாக்கி என்னைத் தூண்டுகின்றன. ஆதலால் ரகுவம்ச அரசர்களின் சரிதத்தை கூறத் தொடங்குகின்றேன்."

तं सन्तः श्रोतुमर्हन्ति सदसद्व्यक्तिहेतवः ।
हेम्नः संलक्ष्यते ह्यग्नौ विशुद्धिः श्यामिकापि वा ॥ १० ॥

**तं** - அந்த காவ்யத்தை, **सदसद्-व्यक्ति-हेतवः** - குணம் தோஷம் இவைகள் புலப்படுதலுக்குக் காரணமான, **सन्तः** - பெரியோர்கள், **श्रोतुं** - கேட்பதற்கு, **अर्हन्ति** - தகுந்தவர்களாகின்றனர்; **हि** - ஏனெனில், **हेम्नः** - தங்கத்தின், **विशुद्धिः** - சுத்தமான தன்மையோ, **श्यामिका अपि वा** - சுத்தமற்ற தன்மையோ, **अग्नौ** - நெருப்பில், **संलक्ष्यते** - நன்றாகப் பார்க்கப்படும்.

(க-து) "நான் எழுதும் காவ்யத்தை பெரியோர்கள் செவி ாய்த்துக் கேட்கவேண்டும். பொன் பரிசுத்தமானதா அல்லது

வேறு உலோகத்தின் கலப்பை அடைந்திருப்பதால் மட்டமானதா என்பது அதை நெருப்பில் காய்ச்சிப்பார்த்தால் தெரியும். அதுபோல் பெரியோர்களே ஒரு காவ்யத்தின் குணத்தையும் குற்றத்தையும் எடுத்துக்காட்ட வல்லவர்கள்."

वैवस्वतो मनुर्नाम माननीयो मनीषिणाम् ।
आसीन्महीक्षितामाद्यः प्रणवश्छन्दसामिव ॥ ११ ॥

**मनीषिणां** - வித்வான்களால், **माननीयः** மதிக்கத்தக்கவரும், **छन्दसां** - வேதங்களுக்கு, **प्रणवः इव** - பிரணவம்போல் **महीक्षितां** - அரசர்களுக்கு, **आद्यः** - முதல்வரும், **वैवस्वतः नाम** - வைவஸ்தர் எனப்பிரசித்திபெற்றவருமான, **मनुः** - மநு, **आसीत्** - இருந்தார்.

(க-து) வேதங்களுக்கெல்லாம் முதலில் பிரணவம் இருப்பது போல அரசர்களுக்கெல்லாம் முதல் அரசராக இருந்தவர் வைவஸ்வத மநு என்பவர். அவர் ஸூர்யனுடைய புத்திரர். அறிவாளிகளாலும், மதிக்கத்தக்கவராய் அவர் இருந்தார்.

तदन्वये शुद्धिमति प्रसूतः शुद्धिमत्तरः ।
दिलीप इति राजेन्दुः इन्दुः क्षीरनिधाविव ॥ १२ ॥

**शुद्धिमति** - பரிசுத்தமான், **तदन्वये** - அம்மநுவின் வம்சத்தில், **शुद्धिमत्तरः** - மிகவும் பரிசுத்தனான, **दिलीप इति** - திலீபன் என்ற, **राजेन्दुः** - சந்திரன் போன்ற அரசன், **क्षीरनिधौ** - பாற்கடலில், **इन्दुः इव** - சந்திரன் பிறந்ததுபோல, **प्रसूतः** - பிறந்தான்.

(க-து) பாற்கடலில் சந்திரன் பிறந்ததுபோல, மனுவின் வம்சத்தில் திலீபன் என்ற சிறந்த அரசன் பிறந்தான்.

व्यूढोरस्को वृषस्कन्धः सालप्रांशुर्महाभुजः ।
आत्मकर्मक्षमं देहं क्षात्रो धर्म इवाश्रितः ॥ १३ ॥

**व्यूढोरस्कः** - விசாலமான மார்பையுடையவனும், **वृषस्कन्धः** - காளையினுடையவைபோன்ற தோள்களையுடையவனும், **प्रांशुः** - உயரமானவனும், **महाभुजः** - பெரிய கைகளை

யுடையவனுமான், (सः) - அவன், आत्म-कर्म-क्षमं - தனது தொழிலுக்குத் தகுந்த, देहं - சரீரத்தை, आश्रितः - அடைந்த, क्षात्रः - க்ஷத்ரியனுடையதான, धर्मः इव - தர்மம்போல், स्थितः - இருந்தான்.

(க-து) அவன் விசாலமான மார்புடனும், பருத்த தோளுடனும், நீண்ட கைகளுடனும் உயரமாக இருந்தான். பிரஜைகளைக் காப்பதையே தொழிலாகக் கொண்டது க்ஷத்ரிய தர்மம். அத்தொழிலைச் சரியாகச் செய்வதற்கு அனுகூலமான உருவத்தை எடுத்துக்கொண்ட க்ஷத்ரிய தர்மம்போல் அவன் காணப்பட்டான்.

सर्वातिरिक्तसारेण सर्वतेजोऽभिभाविना ।
स्थितः सर्वोन्नतेनोर्वीम् क्रान्त्वा मेरुरिवात्मना ॥ १४ ॥

सर्वातिरिक्त-सारेण - எல்லாவற்றைக் காட்டிலும் அதிக பலமுடையதும், सर्व तेजोऽभिभाविना - எல்லாவற்றையும் (தனது) ஒளியால் அடக்குவதும், सर्वोन्नतेन-எல்லாவற்றைக் காட்டிலும், உயர்ந்ததுமான, आत्मना - தனது சரீரத்தினால், मेरुः इव - மேருமலைபோல், उर्वीम् - பூமியை, क्रान्त्वा - ஆக்ரமித்துக்கொண்டு स्थितः - இருந்தான்.

(க-து) அவன் சிறந்த பலமுடையனாகவும், மேலான வீர்யமுடையனாகவும் இருந்தான். மற்றவகையிலும் சிறந்து உலகில் ஒரு முக்ய புருஷனாக அவன் இருந்தான். வன்மையிலும் உயர்விலும் மேருமலை அவனுக்கு உபமானமாகக் கூறப்படுகின்றது.

आकारसदृशप्रज्ञः प्रज्ञया सदृशागमः ।
आगमैः सदृशारंभ आरंभसदृशोदयः ॥ १५ ॥

आकार-सदृश-प्रज्ञः - உருவத்திற்கு தக்க அறிவுடையவனாகவும், प्रज्ञया - அறிவிற்கு, सदृशागमः - தக்க சாஸ்திரப் பயிற்சி யுடையவனாகவும், आगमैः - சாஸ்திரப்பயிற்சிக்கு, सदृशारंभः - தகுந்த முயற்சி யுடையவனாகவும், आरंभ-सदृशोदयः - முயற்சிக்குத் தக்க பயனுடையவனாகவும், (सः) - அவன், स्थितः - இருந்தான்.

(க-து) அவன் நல்ல தோற்றமுடையவன்; தோற்றம் போலவே அவனுக்குச் சிறந்த புத்தியும் இருந்தது. சிறந்த புத்தியைக் கொண்டு அதற்குத் தக்கவாறு சாஸ்திரங்களைப் பயின்று அறிவு பெற்றிருந்தான்; அறிவுக்குத்தக்க முயற்சிகளும் முயற்சிக்குத்தக்க பயனும் அவனுக்கு இருந்தன. இவ்வாறு, உருவம், புத்தி, அறிவு, முயற்சி பயன் எல்லாம் ஏற்றத்தாழ்வின்றி ஒன்றுக்கொன்று ஸமமான அளவில் அவனுக்கு இருந்தன.

भीमकान्तैर्नृपगुणैः स बभूवोपजीविनाम् ।
अधृष्यश्चाभिगम्यश्च यादोरत्नैरिवार्णवः ॥ १६ ॥

**भीमकान्तैः** - அச்சம் உண்டாக்குவனவும் விரும்பத்தக்கனவுமான, **नृपगुणैः** - அரசர்க்குரிய குணங்களால், **सः** - அவன் (திலீபன்), **यादोरत्नैः** ஜலஜந்துக்களினுலும் ரத்தினங்களினுலும், **अर्णवः इव** - சமுத்ரம் (இருப்பது) போல, **उपजीविनां** - தன்னை அண்டிப்பிழைப்பவர்களுக்கு, **अधृष्यः च** - அவமதிக்க முடியாதவனுகவும், **अभिगम्यः च** - அணுக முடிந்தவனுகவும், **बभूव** - இருந்தான்.

(க-து) திலீபனிடம், வீர்யம், குற்றம் செய்தவர்களைத் தண்டித்தல் முதலான அஞ்சத்தக்க குணங்களும், தாக்ஷிண்யம் முதலிய விரும்பத்தக்க குணங்களும் இருந்ததால், அவன் பிரஜைகளால் அவமதிக்க முடியாதவனுகவும், அதே சமயத்தில் அவர்களால் அணுகத்தக்கவனுகவும் இருந்தான். திலீபனுக்கு உபமானம் சமுத்ரம். அச்சத்தைக் உண்டாக்கும் திமிங்கிலம் முதலியவை இருப்பதால் கடல் பயத்தை உண்டாக்குகின்றது. முத்து பவழம் முதலிய ரத்னங்கள் இருப்பதால் அவற்றிற்காக நாம் கடலை அணுகுகின்ருேம். இவ்வாறு கடல் அஞ்சத்தக்கதாகவும் அணுகத்தக்கதாகவும் இருப்பது போல், திலீபனும், சில குணங்களால் அஞ்சத்தக்கவனுகவும், சில குணங்களின் காரணமாய் அணுகத்தக்கவனுகவும் இருந்தான்.

रेखामात्रमपि क्षुण्णात् आ मनोर्वर्त्मनः परम् ।
न व्यतीयुः प्रजास्तस्य नियन्तुर्नेमिवृत्तयः ॥ १७ ॥

**नियन्तुः** - அடக்குபவனுன, **तस्य** - அவனுடைய, **नेमिवृत्तयः** - ரதசக்கரத்தின் முனைபோல் செயலையுடைய

**प्रजाः** - பிரஜைகள், **आ मनोः** - மநுமுதற் தொடங்கி, **क्षुण्णात्** - தேய்ந்த, **वर्त्मनः** - மார்க்கத்தைவிட்டு, **परं** - அதிகமாக, **रेखामात्रं अपि** - ஒரு கோடு அளவும், **न व्यतीयुः** - விலகிச் சென்ருர்களில்லை.

(க-து) திலீபனுடைய பிரஜைகள் மநுகாலம் முதல் செய்து பழகிய முறையிலேயே வாழ்க்கையை நடத்தினர். வண்டியின் சக்கரம், தேய்ந்த பாதையைவிட்டு விலகாது செல்வதுபோல் முன்னோர்கள் சென்ற முறையிலேயே சென்றனர்.

प्रजानामेव भूत्यर्थं स ताभ्यो बलिमग्रहीत् ।
सहस्रगुणमुत्स्रष्टुम् आदत्ते हि रसं रविः ॥ १८ ॥

**सः** - அவ்வரசன், **प्रजानां** - ஜனங்களின், **भूत्यर्थं एव** - செல்வத்தின் பொருட்டே, **ताभ्यः** - அவர்களிடமிருந்து, **बलिं** - வரியை, **अग्रहीत्** - வாங்கினுன்; **रविः** - ஸூர்யன், **सहस्रगुणं** - ஆயிரம் மடங்காக, **उत्स्रष्टुं** - கொடுப்பதற்காக, **रसं** - ஜலத்தை, **आदत्ते हि** - எடுத்துக்கொள்ளுகிருன் அன்றே!

(க-து) சூரியன் பூமியிலுள்ள நீரை ஆவி வடிவத்தில் எடுத்து, பன்மடங்கு மழையாக அளிக்கின்ருன். அதுபோல திலீபனும் ஜனங்களிடம் வரியை வாங்கி அதைப் பன்மடங்காக்கி திரும்பவும் அவர்களுக்கே உதவினுன். பிரஜைகளின் நன்மையைக் கருதியே அவர்களிடம் வரியைப் பெற்ருன். வரியை வாங்குவதிலும் ஜனங்களுக்குக் கஷ்டம் தோன்ருதபடி சிறிது சிறிதாக வாங்கினுன்.

सेना परिच्छदस्तस्य द्वयमेवार्थसाधनम् ।
शास्त्रेष्वव्याहता बुद्धिः मौर्वी धनुषि चातता ॥ १९ ॥

**तस्य** - அவனுக்கு, **सेना** - சேனை, **परिच्छदः** - அணியாக, **(बभूव)** - இருந்தது; **शास्त्रेषु** - சாஸ்திரங்களில், **अव्याहता** - தடைபெருத, **बुद्धिः** - புத்தி, **धनुषि** - வில்லில், **आतता** - இழுத்துக் கட்டப்பட்ட, **मौर्वी च** - நாண் (என்ற), **द्वयम् एव** - இரண்டுமே, **अर्थसाधनम्** - காரியத்தை சாதிப்பனவாக, **(बभूव)** - இருந்தன.

(க-து) திலீபன் சாஸ்திரங்களில் நல்ல பயிற்சிபெற்ற தனது புத்தி பலத்தினாலும், வில்லின் வலிமையினாலும் காரியங்களைச் சாதித்துக்கொண்டான். சக்தியற்ற மற்ற அரசர்களைப்போல ஸேனைகளை உபயோகிக்கவில்லை. ஆனால் அவனிடம் சேனைகள் இருந்தன. அவைகள் அவனுக்கு குடையும் சாமரமும்போல அணியாக இருந்தன.

तस्य संवृतमन्त्रस्य गूढाकारेङ्गितस्य च ।
फलानुमेयाः प्रारंभाः संस्काराः प्राक्तना इव ॥ २० ॥

**संवृत-मन्त्रस्य**-நன்கு மறைக்கப்பட்ட மந்திரலோசனையுடையவனும், **गूढ-आकार-इंगितस्य च** - மறைக்கப்பட்ட தோற்றம், செயல் இவைகளையுடையவனுமான, **तस्य** - அவ்வரசனுடைய, **प्रारंभाः** - முயற்சிகள், **प्राक्तनाः** - முன்ஜன்மத்தில் ஏற்பட்ட, **संस्काराः**-**इव**-பண்புகள்போல, **फलानुमेयाः**-பலனைக்கொண்டு ஊஹிக்கத்தக்கவைகளாக, (आसन्) - இருந்தன.

(க-து) அரசன் தனது ஆலோசனையை நன்கு பாதுகாக்க வேண்டும். அவனது முகத் தோற்றமும் செயலும் அவன் மனத்திலுள்ள கருத்தை வெளிக்காட்டுதல் கூடாது. திலீபனும் தனது ராஜ்ய ரஹஸ்யத்தை நன்கு பாதுகாத்தான். அவன் செய்யும் முயற்சிகள் எல்லாம், செய்யப்படும் காலத்தில் பிறரால் அறிய முடியாது இருந்தன. பயன் கிட்டியபின்பே அம்முயற்சி ஊஹிக்க முடிந்தது.

பூர்வஜன்மத்தில் ஏற்பட்ட அனுபவத்தினால் உண்டான பண்பு ஸம்ஸ்காரம் எனப்படும். இப்பண்பு இந்த ஜன்மத்தில் நினைவில் கொண்டு வர இயலாது. ஆயினும் இச் சன்மத்தில் உண்டான பயனைக்கொண்டு பூர்வஜன்ம ஸம்ஸ்காரத்தை ஊஹிக்க முடியும். அதுபோல் பயனைக்கொண்டே அவனது முயற்சிகள் ஊஹிக்கப்பட்டன. அவனது ராஜ்ய காரியங்கள் சத்ருக்கள் அறியாதபடி அவ்வளவு ரஹஸ்யமாக இருந்தன என்பது கருத்து.

जुगोपात्मानमत्रस्तः भेजे धर्ममनातुरः ।
अगृध्नुराददे सोऽर्थम् असक्तः सुखमन्वभूत् ॥ २१ ॥

**अत्रस्तः** - பயமற்றமனாக, **सन्** - இருந்துகொண்டு **सः** - அவன், **आत्मानं** - தன்னை, **जुगोप** - காத்துக்கொண்டான். **अनातुरः** - வியாதியற்றவனாக, **धर्मं** - தர்மத்தை, **भेजे** - அடைந்தான். **अगृध्नुः** - ஆசையற்றவனாக, **अर्थं** - செல்வத்தை, **आददे** - சம்பாதித்தான். **असक्तः** - பற்றில்லாதவனாக, **सुखं** - ஸுகத்தை, **अन्वभूत्** – அனுபவித்தான்.

(க-து) பயப்படுவதற்குக் காரணமான பொருள் எதுவுமே இல்லாமற் செய்துகொண்டான். உடல் நல்ல நிலையில் இருக்கும் பொழுதே உடலை வருத்தாது தர்மங்களைச் செய்தான்; பொருளைச் சம்பாதித்தான். ஆனால் பேராசை கொள்ளவில்லை. உலகசுகங்களை அனுபவித்தான். ஆனால் அவைகளில் அதிகம் பற்றுடையவனில்லை.

ज्ञाने मौनं क्षमा शक्तौ त्यागे श्लाघाविपर्ययः ।
गुणा गुणानुबन्धित्वात् तस्य सप्रसवा इव ॥ २२ ॥

**ज्ञाने** - (பிறருடைய குற்றத்தின்) அறிவு, **सत्यपि** - இருக்கும்பொழுது, **मौनं** - பேசாதிருத்தலும், **शक्तौ** - (பிரதி அபகாரம் செய்யச்) சக்தி, **सत्यां अपि** - இருந்தபொழுதும், **क्षमा** - பொறுமையும், **त्यागे सति** - கொடை இருந்தபொழுதும், **श्लाघा विपर्ययः** - தற்புகழ்ச்சி இல்லாமையும் ஆகிய, **तस्य** - அவனுடைய, **गुणाः** - குணங்கள், **गुणानुबन्धित्वात्** - எதிரான குணங்களுடன் தொடர்ந்திருந்ததால், **सप्रसवाः इव** - ஸஹோதரர்கள்போல், (**आसन्**) - இருந்தன.

(க-து) பிறருடைய குற்றங்களை அறிந்தும் அவன் அவைகளைக் கூறாது இருந்தான். தனக்குத் தீங்கு செய்தவர்களுக்குப் பிரதிசெய்ய வல்லமை யிருந்தும் அவன் அவர்களைப் பொறுத்தான். நல்ல கொடைகளைச் செய்தானாயினும் தற்புகழ்ச்சி கொள்ளவில்லை. ஆதலால் அறிவு, பலம் கொடை இவைகளுடன், புறங்கூறாமை பொறுத்தல், தற்புகழ்ச்சி இன்மை என்ற முரண்பட்ட இக்குணங்களும் அவனிடம் ஸஹோதரர்கள்போல் சேர்ந்து இருந்தன.

अनाकृष्टस्य विषयैः विद्यानां पारदृश्वनः ।
तस्य धर्मरतेरासीत् वृद्धत्वं जरसा विना ॥ २३ ॥

**विषयैः** - உலகப்பொருள்களால், **अनाकृष्टस्य** - கவரப்படா தவனும், **विद्यानां** - வித்தைகளின், **पारदृश्वनः** - கரையைக் கண்டவனும், **धर्मरतेः** - தர்மத்தில் பற்றுடையவனுமான, **तस्य** - அவனுக்கு, **जरसा विना** - வயதின் முதிர்ச்சியின்றியே, **वृद्धत्वं** - முதுமை, **आसीत्** - இருந்தது.

(க-து) வயதின் முதிர்ச்சியின்றியே வயது முதிர்ந்தவர்களுக் குரிய அறிவும் அனுபவமும் அவன் பெற்றிருந்தான். உலக விஷயங் களுக்கு வசப்பட்டு அவைகளுக்கு அடிமையாக அவன் இருந்தா னில்லை. கல்விக்கடலின் கரையைக் கண்டிருந்தான். தர்மங்களில் அவனது மனம் பற்றுடையதாயிருந்தது.

प्रजानां विनयाधानात् रक्षणाद् भरणादपि ।
स पिता पितरस्तासां केवलं जन्महेतवः ॥ २४ ॥

**प्रजानां** - ஜனங்களுக்கு, **विनयाधानात्** - விநயத்தை (பண்பை) உண்டாக்குவதாலும், **रक्षणात्** - (அவர்களைக்) காப்பதாலும், **भरणादपि** - போஷிப்பதினாலும், **सः** - அவன், **पिता** - தந்தையாக இருந்தான்; **तासां** - அந்த ஜனங்களின், **पितरः** - தந்தையர், **जन्महेतवः केवलम्** - பிறப்பிற்குக் காரண மாக மாத்திரமே இருந்தனர்.

(க-து) திலீபன் தனது பிரஜைகளுக்கு நல்ல கல்வியை யளித்து அவர்களது மனத்தைப் பண்படுத்தினான்; ஆபத்தினின் றும் காத்தான். உணவு முதலியவைகளை யளித்துப் போஷித்தான். இவ்வாறு, ஒரு தந்தை தம் மக்களுக்குச் செய்யவேண்டியதை எல்லாம் திலீபன் தன் ஜனங்களுக்குச் செய்தான். அதனால் அவன் அவர் களுக்குத் தந்தையாக இருந்தான் என்று கூறலாம். ஜனங்களின் தாய்களும் தந்தையரும் அவர்களைப் பெற்றனரேயன்றி அவர்களுக்கு ஆகவேண்டியதை எல்லாம் திலீபன் செய்துவந்தான்.

स्थित्यै दण्डयतो दण्ड्यान् परिणेतुः प्रसूतये ।
अप्यर्थकामौ तस्यास्तां धर्म एव मनीषिणः ॥ २५ ॥

**स्थित्यै**-நன் நிலைக்காக, **दण्ड्यान्**-தண்டிக்கத்தக்கவர்களை, **दण्डयतः** - தண்டிப்பவனும், **प्रसूतये** - ஸந்ததியின்பொருட்டு,

**परिणेतुः** - விவாஹம் செய்துகொண்டவனும், **मनीषिणः** - அறிவுடையவனுமான, **तस्य** - அவனுடைய, **अर्थकामौ अपि** - அர்த்தம், காமம் என்ற இரு புருஷார்த்தங்களும் கூட, **धर्मः एव** - தர்மமாக, **आस्तात्** - இருந்தன.

(க-து) மனிதர்கள் தாம்பெற விரும்புகின்றவைகளை நான்கு வகையாகப் பிரித்திருக்கின்றனர். அவையாவன: தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பனவாம். இவைகளில் தர்மமும் மோக்ஷமும் சிறந்தன.

திலீபன் குற்றவாளிகளுக்கு அபராதம் விதித்துப் பணம் பெற்றான். மனைவியுடன் இல்லத்தில் வாழ்ந்து வந்தான். அபராதத்தின் மூலம் பணம்பெற்றது அர்த்தம் என்பதாகும். மனைவியுடன் வாழ்ந்தது காமம் என்ற புருஷார்த்தமாகும். ஆயினும் இவ்விரண்டும் அவனால் தர்மத்தைக்கருதியே அனுஷ்டிக்கப்பட்டனவாதலால் அவைகளும் தர்மமாகவே கருதப்படவேண்டுவன.

दुदोह गां स यज्ञाय सस्याय मघवा दिवम् ।
संपद्विनिमयेनेभौ दधतुर्भुवनद्वयम् ॥ २६ ॥

**सः** - அவன், **यज्ञाय** - யாகம் செய்வதற்காக **गां** - பூமியை, **दुदोह** - கறந்தான்; **मघवा** - இந்திரன், **सस्याय** - பயிர்களின் நன்மையின் பொருட்டு, **दिवं** - ஸ்வர்க்கத்தை, **दुदोह** - கறந்தான்: **उभौ** - இவ்விருவரும், **संपद् विनिमयेन** - தங்களது செல்வத்தை மாற்றிக்கொள்வதால், **भुवनद्वयं** - இரு உலகங்களையும், **दधतुः** - காப்பாற்றினர்.

(க-து) திலீபன் யாகம் செய்வதற்காக பூமியினிடமிருந்து பொருள்களைப்பெற்று, யாகம் செய்து இந்திரன் முதலான தேவர்களை மகிழ்வித்தான். இந்திரன், திலீபன் ராஜ்யத்தில் பயிர்களின் விருத்தியைக்கருதி நல்லமழை பெய்வித்தான். இந்திரனும் திலீபனும் ஒருவர்க்கொருவர் உதவிசெய்து பூமியையும் ஸ்வர்க்கத்தையும் காப்பாற்றினர்.

न किलानुययुस्तस्य राजानो रक्षितुर्यशः ।
व्यावृत्ता यत् परस्वेभ्यः श्रुतौ तस्करता स्थिता ॥ २७ ॥

**राजानः** - மற்ற அரசர்கள், **रक्षितुः** - ஆபத்தினின்றும் காப்பவனாகிய, **तस्य** - அவனுடைய, **यशः** - புகழை, **न अनुययुः किल** - அனுசரிக்க முடியவில்லை; **यत्** - ஏனெனில், **तस्करता** - திருட்டு என்பது, **परस्वेभ्यः** - பிறருடைய செல்வத்தினின்றும், **व्यावृत्ता** - நீங்கியதாய், **श्रुतौ** - சொல்லில் மாத்திரமே, **स्थिता** - இருந்தது.

(க-து) திலீபன் ராஜ்யத்தில் திருட்டு என்பது சொல்லளவிலேதான் இருந்தது. காரியத்தில் இல்லை. பிறருடைய பொருள் விஷயத்தில் அது சொல்லவில்லை. அவனுடைய ராஜ்யத்தில் திருடனே இல்லை. அதனால் மற்ற அரசர்கள் திலீபனைப்போல் நற்புகழைப்பெற முடியவில்லை.

द्वेष्योऽपि संमतः शिष्टः तस्यार्तस्य यथौषधम् ।
त्याज्यो दुष्टः प्रियोऽप्यासीत् अंगुळीवोरगक्षता ॥ २८ ॥

**शिष्टः** - நல்ல மனிதன், **द्वेष्यः अपि** - திலீபனுக்குப் பகைவனாயினும், **आर्तस्य** - வியாதியஸ்தனுக்கு, **औषधं यथा** - மருந்து (இருப்பது) போல், **तस्य** - அவனுக்கு, **संमतः** - பிரியமானவனாக - **आसीत्** - இருந்தான்; **दुष्टः** - துஷ்டன், **प्रियोऽपि** - அன்பனாயினும், **उरगक्षता** - பாம்பினால் கடிக்கப்பட்ட, **अंगुळी इव** - விரல்போல், **त्याज्यः** - விடத்தக்கவனாக, **आसीत्** - இருந்தான்.

(க-து) திலீபன், தனது பகைவனாயினும்—நல்லவனாயிருப்பின்—வியாதிஸ்தன் மருந்தை விரும்புவதுபோல் அவனிடம் விருப்புக்கொண்டான். துஷ்டன் — தனக்கு அன்பனாயினும் — பாம்பு கடித்த விரலை வெட்டி எறிவதுபோல் அவனிடம் வெறுப்புக்கொண்டு விலக்கினான்.

तं वेधा विदधे नूनं महाभूतसमाधिना ।
तथाहि सर्वे तस्यासन् परार्थैकफला गुणाः ॥ २९ ॥

**वेधाः** - பிரம்மன், **तं** - அவனை, **महाभूतसमाधिना** - ஐந்து மஹாபூதங்களென்ற மூலப்பொருளால், **विदधे** - படைத்தான்; **नूनम्** - இஃது உண்மையே; **तथा हि** - எவ்வாறெனில்,

**तस्य** - அவனுடைய, **सर्वे गुणाः** - எல்லாகுணங்களும், **परार्थैकफलाः** - பிறருடைய நன்மையைப் பயனையுடையன வாக, **आसन्** - இருந்தன.

(க-து) ஐந்து மஹாபூதங்களாவன :—நிலம், நீர், அக்னி, காற்று, ஆகாயம் என்பனவாம். இவ்வைந்து பொருள்களான மூலப் பொருளைக்கொண்டே பிரம்மன் திலீபனைப் படைத்தான்போலும்; இவ்வாறு ஊஹிப்பதற்குக் காரணம் யாதெனில் ஐந்து மஹாபூதங் களின் குணங்களான நிறம் மணம் முதலியவை பிறர்க்குப் பயன்படு வதுபோல் இவனது குணங்களான பலம் அறிவு இரக்கம் முதலிய வைகளும் பிறர்க்கு உபகாரம் செய்யவே இருந்தன. பஞ்சபூதங் களைப்போல் அவனும் பிறர்க்கே பயன்பட்டான்.

स वेलावप्रवलयां परिखीकृतसागराम् ।
अनन्यशासनामुर्वीं शशासैकपुरीमिव ॥ ३० ॥

**सः** - அவன், **वेला-वप्र-वलयां** - கடற்கரையையே கோட்டைச்சுவராக உடையதும், **परिखीकृत सागराम्** - அகழாக அமைந்த கடலையுடையதும், **अनन्यशासनां** - வேற்று அரசன் ஆணையற்றதுமான, **उर्वीम्** - அப்பூமியை, **एकपुरीं इव** - ஒரு நகரத்தை (ஆள்வது) போல, **शशास** - ஆண்டான்.

(க-து) திலீபன் கடல்வரை நீண்ட இப்பூமியை ஆண்டான். அவனுடைய ராஜ்யத்திற்குக் கடற்கரையே கோட்டைச் சுவராகவும், கடலே அகழாகவும் இருந்தன. அவனது ஆணைக்கு எதிர் ஆணை அந்த ராஜ்யத்தில் இல்லை. மற்றை அரசர்கள் அவனுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்களாக இருந்தனர். சிறு நகரத்தை ஆள்வதுபோல் அப் பெரும் ராஜ்யத்தைச் சிரமமின்றி ஆண்டான்.

तस्य दाक्षिण्यरूढेन नाम्ना मगधवंशजा ।
पत्नी सुदक्षिणेत्यासीत् अध्वरस्येव दक्षिणा ॥ ३१ ॥

**तस्य** - அவனுக்கு, **मगधवंशजा** - மகதவம்சத்தில் தோன்றியவளும், **दाक्षिण्य रूढेन** - தாக்ஷிண்யத்தினால் பிறந்த, **नाम्ना**-

பெயரோடு, **अध्वरस्य** - யாகத்திற்கு, **दक्षिणा-इव** - தக்ஷிணை என்ற மனைவிபோல், **सुदक्षिणा इति** - ஸுதக்ஷிணை என்று பிரசித்திபெற்ற, **पत्नी** - மனைவி, **आसीत्** - இருந்தாள்.

(க-து) திலீபனுக்கு ஸுதக்ஷிணை என்ற மனைவி யிருந்தாள். அவள் மகதராஜன் வம்சத்தில் பிறந்தவள். தாக்ஷிண்யம் என்ற குணமுடையளாயிருந்ததால் அவளுக்கு ஸுதக்ஷிணை எனப் பெயர் ஏற்பட்டது,

பிறர் விருப்பத்தை அனுசரித்தலுக்குத் தாக்ஷிண்யம் எனப் பெயர் ; யாகத்திற்குத் தக்ஷிணையை மனைவியாகக் கூறுவது வழக்கம்.

कलत्रवन्तमात्मानं अवरोधे महत्यपि ।
तया मेने मनस्विन्या लक्ष्म्या च वसुधाधिपः ॥ ३२ ॥

**वसुधाधिपः** - அவ்வரசன், **अवरोधे** - அந்தப்புர ஸ்திரீகள், **महत्यपि** - பலர் இருந்தபொழுதிலும், **मनस्विन्या** - நல்ல மனமுடைய, **तया** - அவளாலும், **लक्ष्म्या च** - ராஜ்யத்தினுலுமே, **आत्मानं** - தன்னை, **कलत्रवन्तं** - மனைவிகளுடன் கூடியவனாக, **मेने** - எண்ணினான்.

(க-து) திலீபனுக்குப் பல மனைவியர் இருந்தனர் ; ஆயினும் ஸுதக்ஷிணையையும் ராஜ்யத்தையுமே அவன் அதிகம் மதித்தான்.

ராஜ்யத்தை அரசர்களது மனைவியாகக் கூறுவது மரபு.

तस्यामात्मानुरूपायां आत्मजन्मसमुत्सुकः ।
विलम्बितफलः कालं स निनाय मनोरथैः ॥ ३३ ॥

**सः** - அவன், **आत्मानुरूपायां** - தனக்குத் தகுந்த, **तस्यां** - அவளிடத்தில், **आत्मजन्मसमुत्सुकः** - புத்திரனை அடைவதில் விருப்புடையவனாக, **विलंबित फलैः** - தாமதித்த பயனை உடைய, **मनोरथैः** - ஆசைகளுடன், **कालं** - காலத்தை **निनाय**- போக்கினான்.

(க-து) திலீபன், எல்லாவகையிலும் தகுந்த ஸுதக்ஷிணையிடத்தில் தனக்கொரு புத்ரன் பிறக்கவேண்டுமென விரும்பினான்.

ஆனல் அவனது ஆசை நிறைவேறாது காலம் சென்று கொண் டிருந்தது.

सन्तानार्थाय विधये स्वभुजादवतारिता ।
तेन धूर्जगतो गुर्वी सचिवेषु निचिक्षिपे ॥ ३४ ॥

**तेन** - அவனல், **सन्तानार्थाय** - புத்திரனை அடைவதற்கான, **विधये** - நற்காரியத்தைச் செய்வதன் பொருட்டு, **स्वभुजात्** - தனது தோளிலிருந்து, **अवतारिता**-இறக்கப்பட்ட, **जगतः** - உலகின், **गुर्वी** - பெரிய, **धूः** - பாரமானது, **सचिवेषु** - மந்திரிகளிடத்தில், **निचिक्षिपे** - வைக்கப்பட்டது.

(க-து) திலீபன், புத்திரனை அடையக்கருதி அதற்கான விரதம் முதலியவைகளை அனுஷ்டிக்க விரும்பியவனாய், ராஜ்யத்தைப் பாது காக்கும் பொறுப்பை மந்திரிகளிடம் ஒப்படைத்தான்.

अथाभ्यर्च्य विधातारं प्रयतौ पुत्रकाम्यया ।
तौ दम्पती वसिष्ठस्य गुरोर्जग्मतुराश्रमम् ॥ ३५ ॥

**अथ** - பிறகு, **पुत्रकाम्यया** - புத்ரனை அடைய விருப்பத்தினல், **तौ दंपती**-அந்த தம்பதிகள், **प्रयतौ** - பரிசுத்தர்களாக, **विधातारं** - பிரம்மதேவரை, **अभ्यर्च्य** - பூஜித்தபின், **गुरोः**-குல குருவான, **वसिष्ठस्य** - வஸிஷ்டரின், **आश्रमं**-ஆச்ரமத்திற்கு, **जग्मतुः** - சென்றனர்.

(க-து) திலீபனும் ஸுதக்ஷிணையும் பிரம்மதேவரைப் பூஜித்த பின், புத்ரன் பிறவாததன் காரணத்தையும் அதற்காகச் செய்யவேண் டிய பரிகாரத்தையும் அறியக்கருதி, குலகுருவான வஸிஷ்டரின் ஆச்ரமம் சென்றனர்.

இது முதல் 45-வது சுலோகம்வரை அத்தம்பதிகள் ஆச்ரமம் சென்றமை கூறப்படுகின்றது.

स्निग्ध-गंभीर-निर्घोषं एकं स्यन्दनमास्थितौ ।
प्रावृषेण्यं पयोवाहं विद्युदैरावताविव ॥ ३६ ॥

**स्निग्ध-गंभीर-निर्घोषं** - இனிய கம்பீரமான ஓசையுடைய, **एकं** - ஒரு, **रथं** - ரதத்தில், **आस्थितौ** - அமர்ந்தவர்களாய்,— **प्रावृषेण्यं** - மழைக்காலத்திலிருந்த, **पयोवाहं** - மேகத்தில், **आस्थितौ** - அமர்ந்த, **विद्युदैरावतौ-इव** - மின்னலும் ஐராவதமும்போல், **(जग्मतुः)** - சென்றனர்.

(க-து) திலீபனும் ஸுதக்ஷிணையும் ஒரே ரதத்தில் அமர்ந்து சென்றனர். பாற்கடற் கடைந்தபொழுது அதில் தோன்றியது ஐராவதம். ஐராவதத்தின் மனைவியாக மின்னல் கருதப்படுகின்றது. திலீபன் தன் மனைவியுடன் ஒரே ரதத்தில் சென்றதற்கு ஒப்பாக, ஐராவதம் அதன் மனைவியான மின்னலுடன் ஒரே மேகத்தில் செல்வது கூறப்படுகிறது. மழைக்காலமேகம் இனிய கம்பீரமான சத்தமுடையது. அதுபோல் திலீபனுடைய ரதமும் இனிய கம்பீரமான ஓசையுடன் சென்றது. பெருந்தன்மையுடன் கூடிய தோற்றத்தில் திலீபனுக்கு ஐராவதமும், அழகில் ஸுதக்ஷிணைக்கு மின்னலும் உபமானங்கள். ஐராவதம்-வானவில்-என்பாருமுண்டு.

मा भूदाश्रमपीडेति परिमेयपुरस्सरौ ।
अनुभावविशेषात् तु सेना परिवृताविव ॥ ३७ ॥

**'आश्रमपीडा** - (குருவின்) ஆச்ரமத்திற்கு உபத்ரவம், **मा भूत्** - உண்டாகவேண்டாம்,' **इति** - என்ற காரணத்தினால், **परिमेयपुरस्सरौ** - குறைவான வேலைக்காரர்களையுடையவர்களாகவும், **अनुभाव विशेषात् तु** - தோற்றச்சிறப்பினால், **सेना परिवृतौ इव** - ஸேனையால் சூழப்பட்டவர்கள்போல, **स्थितौ** - இருந்தவர்களாகவும், **(जग्मतुः)** - சென்றனர்.

(க-து) ஸேனையுடன் சென்றால் குருவின் ஆச்ரமத்திற்குக்கஷ்டம் உண்டாகும் என எண்ணி மிகக் குறைவான வேலைக்காரர்களுடன் சென்றான். ஆயினும் அவனுடைய சிறந்தத் தோற்றம் காரணமாக அவன் பெரும்படையுடன் கூடியவன்போல் காணப்பட்டான்.

सेव्यमानौ सुखस्पर्शैः सालनिर्यासगन्धिभिः ।
पुष्परेणूत्किरैर्वातैः आधूतवनराजिभिः ॥ ३८ ॥

**सुखस्पर्शैः** - சுகமான ஸ்பர்சமுடையவைகளும், **साल-निर्यासगन्धिभिः**- ஸாலமரப்பிசினுடைய வாசனை யுடையவை

களும், **पुष्परेणूत्किरैः** - புஷ்பங்களின் மகரந்தப் பொடிகளை இறைப்பவைகளும், **आधूतवनराजिभिः** - மெல்ல அசைக்கப் பட்ட வன (விருக்ஷ) ஸமூகங்களையுடையவைகளுமான, **वातैः** - காற்றுக்களால், **सेव्यमानौ** - உபசரிக்கப்பட்டவர்களாக, **(जग्मतुः)** - சென்றனர்.

(க-து) திலீபனும் ஸுதக்ஷிணையும் சென்றபொழுது சுகமான காற்று அவர்கள்மேல் வீசியது; சால மரத்தினுடைய பசையின் மணம் காற்றில் இருந்தது. அக்காற்று மெதுவாக வீசி, காட்டிலுள்ள மரங்களை அசைத்ததுடன் புஷ்பங்களின் மகரந்தப் பொடிகளையும் இறைத்தது.

मनोभिरामाः शृण्वन्तौ रथनेमिस्वनोन्मुखैः ।
षड्ज संवादिनीः केकाः द्विधा भिन्नाः शिखण्डिभिः ॥ ३९ ॥

**रथ-नेमि-स्वन-उन्मुखैः**-ரதசக்கரத்தின் சத்தத்தினால் தலை நிமிர்த்திய, **शिखण्डिभिः** - மயில்களால், **द्विधा** - இரண்டுவிதமாக, **भिन्नाः** - பகுக்கப்பட்டவைகளும், **षड्जसंवादिनीः** - ஷட்ஜஸ்வரத்திற்கு ஒப்பானவைகளும், **मनोभिरामाः** - மனத்திற்கு இனியவைகளுமான, **केकाः** - அகவுதலை, **शृण्वन्तौ** - கேட்டுக்கொண்டு, **(जग्मतुः)** - சென்றனர்.

(க-து) திலீபனும் ஸுதக்ஷிணையும், தங்களது ரதத்தின் சத்தத்தைக்கேட்டுத் தலை நிமிர்த்திய மயில்கள் அகவுதலை (சத்தங்களை) கேட்டுக்கொண்டு சென்றனர். ஆண்மயிலின் குரல் ஒரு வகையாகவும் பெண்மயிலின் குரல் ஒரு வகையாகவும் இருந்தது. அச் சத்தம், ஸங்கீதத்தில் கூறப்படும் ஷட்ஜம் என்ற ஸ்வரத்திற்குச் சரியானதாக இருந்தது.

परस्पराक्षिसादृश्यं अदूरोज्झितवर्त्मसु ।
मृगद्वन्द्वेषु पश्यन्तौ स्यन्दनाबद्धदृष्टिषु ॥ ४० ॥

**अदूरोज्झितवर्त्मसु** - ஸமீபத்தில் விடப்பட்ட வழியுடையவைகளும், **स्यन्दनाबद्धदृष्टिषु** - ரதத்தில் வைக்கப்பட்ட பார்வை யுடையவைகளுமான, **मृगद्वन्द्वेषु**-மான்களின் ஆண் பெண்களில், **परस्पराक्षिसादृश्यम्** - ஒருவர் மற்றவருடைய

கண்களின் ஒப்புமையை, **पश्यन्तौ** - பார்த்துக்கொண்டு, **(जग्मतुः)** - சென்றனர்.

(க-து) திலீபன் காட்டின்வழியே செல்லும்பொழுது அவனது முகத்தோற்றத்தைக் கண்டு அச்சம் நீங்கி மான்கள் வழியை விட்டுச் சிறிதே விலகி நின்றன. அவன், அவ்வாறு அருகில் நின்ற மான்களுள் பெண்மான்களின் கண்கள் ஸுதக்ஷிணையின் கண்கள் போலிருப்பதைக் கண்டான். ஸுதக்ஷிணை, திலீபன் கண்களை ஆண் மான்களுடைய கண்களோடு ஒப்பிட்டு நோக்கிக்கொண்டு சென்றாள்.

அழகான கண்களுக்கு மான் கண்களை உபமானமாகக் கூறுவர்.

श्रेणीबन्धाद् वितन्वद्भिः अस्तंभां तोरणस्रजम् ।
सारसैः कलनिर्ह्रादैः क्वचिदुन्नमिताननौ ॥ ४१ ॥

**श्रेणीबन्धात्** - வரிசை அமைப்பினால், **अस्तंभां** - தூண்களற்ற, **तोरणस्रजं**-தோரணமாலையை, **वितन्वद्भिः** - செய்கின்றவைகள் (போல்) இருப்பவைகளும், **कलनिर्ह्रादैः**-இனிய சத்தமுடையவைகளுமான, **सारसैः**-ஸாரஸப்பக்ஷிகளால், **क्वचित्** - ஓரிடத்தில், **उन्नमिताननौ** - நிமிர்த்தப்பட்ட முகமுடையவர்களாக, **(जग्मतुः)** - சென்றனர்.

(க-து) காட்டில் செல்லும்பொழுது, ஓரிடத்தில் ஸாரஸ பக்ஷிகள் இனிய குரலில் சத்தமிட்டுக்கொண்டு ஆகாசத்தில் வரிசையாகப் பறந்துசென்றன. அவ்வாறு வரிசையாகச் சென்ற அவைகள், திலீபனை வரவேற்பதற்காகக் கட்டிய தோரணமாலைபோல் காணப்பட்டன. தோரணமாலைகளை வழியில் இருபுறத்திலும் தூண்களை நாட்டிக் கட்டுவது வழக்கம். ஆனால் ஸாரஸத் தோரணமாலைக்குத் தூண்கள் இல்லை. ஸாரஸங்களின் குரல், அத் தம்பதிகள் தலை நிமிர்த்திப் பார்க்கக் காரணமாக இருந்தது.

पवनस्यानुकूलत्वात् प्रार्थना-सिद्धिशंसिनः ।
रजोभिस्तुरगोत्कीर्णैः अस्पृष्टालकवेष्टनौ ॥ ४२ ॥

**प्रार्थना सिद्धि-शंसिनः**-விருப்பத்தின் ஸித்தியைத் தெரிவிக்கின்ற, **पवनस्य** - காற்றின், **अनुकूलत्वात्** - அனுகூலமாக வீசும் தன்மையாலே, **तुरग-उत्कीर्णैः** - குதிரைகளால் எழுப்

பப்பட்ட, **रजोभिः** - புழுதிகளினால், **अस्पृष्ट-अलक-वेष्टनौ** - தொடப்படாத, அலகத்தையும் தலைப்பாகையுமுடையவர்களாக, **(जग्मतुः)** - சென்றனர்.

(க-து) காற்று அத் தம்பதிகள் செல்லும் திசையை நோக்கி வீசியது. அவ்வாறு ஒருவர் செல்லும் திசையை நோக்கி வீசுவது அவருடைய கார்யம் நிறைவேறுவதற்கான ஒரு சுபசகுனமாகக் கருதப்படுகின்றது. ரதத்தில் பூட்டிய குதிரைகள், கிளப்பிய புழுதியைக் காற்று முன்னோக்கி அடித்துக்கொண்டு சென்றதால், அரசியின் முன்னுச்சிக் கேசத்திலும், அரசனது தலைப்பாகையிலும் புழுதி படியவில்லை. ஆதலால் புழுதி மேலே படுவதால் ஏற்படும் கஷ்டமின்றி அவர்கள் சென்றனர்.

सरसीष्वरविन्दानां वीचिविक्षोभ-शीतलम् ।
आमोदमुपजिघ्रन्तौ स्वनिःश्वासानुकारिणम् ॥ ४३ ॥

**सरसीषु** - தடாகங்களில், **वीचिविक्षोभशीतलम्** - அலைகளின் சலனத்தினால் குளிர்ந்ததும், **स्वनिःश्वासानुकारिणम्** - தங்களது மூச்சுக்காற்றுப்போல் இருப்பதுமான, **अरविन्दानां** - தாமரைப் புஷ்பங்களின், **आमोदं** - வாசனையை, **उपजिघ्रन्तौ** - முகர்ந்து கொண்டு, **जग्मतुः** - சென்றனர்.

(க-து) திலீபனும் ஸுதக்ஷிணையும் வழியில் தடாகங்களிலுள்ள தாமரைப் புஷ்பங்களின் குளிர்ந்த வாசனையை அனுபவித்துக் கொண்டு சென்றனர். தாமரையின் மணம் அவர்களது மூச்சுக் காற்றின் மணத்தை ஒத்து இருந்தது.

ग्रामेष्वात्मविसृष्टेषु यूपचिह्नेषु यज्वनाम् ।
अमोघाः प्रतिगृह्णन्तौ अर्घ्यानुपदमाशिषः ॥ ४४ ॥

**आत्मविसृष्टेषु** - தங்களால் தானம் செய்யப்பட்டவைகளும், **यूपचिह्नेषु** - யூபங்களை அடையாளமாக உடையவைகளுமான, **ग्रामेषु** - கிராமங்களில், **अमोघाः** - நிச்சயமாய்ப் பயனளிக்கின்ற, **यज्वनां** - முறைப்படி யாகம்செய்த பிராம்மணர்களின், **आशिषः** - ஆசீர்வாதங்களை, **अर्घ्यानुपदं** - அர்க்கி

யம் பெற்றுக்கொண்டவுடன், **प्रतिगृह्णन्तौ** - ஏற்றுக்கொண்டவர்களாக, **जग्मतुः** - சென்றனர்.

(க-து) திலீபனுல் தானம் செய்யப்பட்ட பல கிராமங்கள் வழியில் இருந்தன. அங்குள்ள பிராமணர்கள் முறைப்படி யாகம் செய்தவர்கள். அதற்கு அடையாளமாகப் பல யூபஸ்தம்பங்கள் அக்கிராமங்களில் காணப்பட்டன; அரசன் வருவதை அறிந்த பிராம்மணர்கள் அர்க்கியத்தைக் கொடுத்த பின் ஆசீர்வாதங்களைச் செய்தனர்; நிச்சயமாய்ப் பயனளிக்கின்ற அவ் வாசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டு இருவரும் சென்றனர்.

யூபம்-யாகத்தில் உபயோகப்படுகின்ற தூண்; அர்க்கியம்-ஒருவரை மரியாதை செய்வதற்காக உபயோகிக்கப்படுகின்ற சந்தனம் புஷ்பம் முதலிய பொருள்கள்.

हैयंगवीनमादाय घोषवृद्धानुपस्थितान् ।
नामधेयानि पृच्छन्तौ वन्यानां मार्गशाखिनाम् ॥ ४५ ॥

**हैयंगवीनं** - புதியதாக உருக்கிய நெய்யை, **आदाय**-எடுத்துக்கொண்டு, **उपस्थितान्** - வந்த, **घोषवृद्धान्** - இடைச்சேரிக் கிழவர்களிடம், **वन्यानां** - காட்டிலுள்ள, **मार्ग शाखिनां** - வழியிலுள்ள மரங்களின், **नामधेयानि** - பெயர்களை, **पृच्छन्तौ**- கேட்டுக்கொண்டு, **जग्मतुः** - சென்றனர்.

(க-து) அரசன் வருவதை அறிந்து வயது முதிர்ந்த இடையர்கள், அரசனை வெறும் கையுடன் காண்பது தகுதியன்றுதலால் தங்களது மரியாதைக் கடையாளமாகப் புதிய நெய்யைக் கொண்டுவந்து கொடுத்துக்கண்டனர். திலீபனும் வழியிலுள்ள மரங்களின் பெயர்களைக் கேட்கும் முறையில் அவர்களுடன் சம்பாஷித்து அவர்களைக் கௌரவித்தான்.

'**हैयंगवीनम्**' - புதிய வெண்ணெய் என்றும் பொருள் கொள்ளலாம்.

काप्यभिख्या तयोरासीत् व्रजतोः शुद्धवेषयोः ।
हिमनिर्मुक्तयोर्योगे चित्राचन्द्रमसोरिव ॥ ४६ ॥

**व्रजतोः**- (ஆச்ரமத்தை நோக்கி) செல்லுகின்றவர்களும், **शुद्धवेषयोः** - பரிசுத்தமான (பிரகாசமான) உடைதரித்தவர்

களுமான, **तयोः** - அவ்விருவர்களுக்கும், **हिमनिर्मुक्तयोः** - பனியினின்றும் விடுபட்ட, **चित्राचन्द्रमसोः इव** - சித்திரை நக்ஷத்ரம் சந்திரன் இவ்விரண்டிற்கும் இருப்பதுபோல், **योगे** - சேர்ந்திருக்கையில், **कापि** - சிறந்த, **अभिख्या** - சோபை, **आसीत्** - இருந்தது.

(க-து) திலீபனும் ஸுதக்ஷிணையும் தூய உடையும் அணியும் அணிந்திருந்தனர். அவ்விருவரும் சேர்ந்து செல்லும்பொழுது அவர்கள் ஒரு தனி அழகுபெற்று விளங்கினர். பனிக்காலம் நீங்கிய பின் வஸந்தகாலத்தில் சித்திரை மாதத்தில் சித்திரை நக்ஷத்திரத்துடனிருக்கும் பூர்ண சந்திரனுக்கு ஒப்ப அவர்கள் சோபித்தனர்.

ஸுதக்ஷிணைக்குச் சித்திரை நக்ஷத்திரமும் திலீபனுக்குச் சந்திரனும் உபமானங்கள்—

சித்திரையும் பூர்ணசந்திரனும் சேரும் சமயம் சித்ரா பௌர்ணமி எனப்படுகிறது.

तत्तद् भूमिपतिः पत्न्यै दर्शयन् प्रियदर्शनः ।
अपि लङ्घितमध्वानं बुबुधे न बुधोपमः ॥ ४७ ॥

**बुधोपमः** - புதனுக்கு ஒப்பானவனும், **प्रियदर्शनः** - அழகிய தோற்றமுடையவனுமான, **भूमिपतिः** - அரசன், **पत्न्यै** - மனைவிக்கு, **तत् तत्** - அந்த அந்த பொருளை, **दर्शयन्** - காண்பித்துக்கொண்டு, **लङ्घितं** - கடக்கப்பட்ட, **अध्वानं अपि** - மார்க்கத்தையும், **न बुबुधे** - அறியவில்லை.

(க-து) அழகிய தோற்றமுடையவன் திலீபன்; புதன்போல் அறிவிலும் சிறந்தவன்; வழியிலே பல பொருள்களை ஸுதக்ஷிணைக்குக் காட்டிக்கொண்டு சென்றதனால் தான் கடந்து வந்தவழி எவ்வளவு என்பதையும் உணரவில்லை. பிரயாணம் அவனுக்குச் சிரமமின்றி இருந்தது.

स दुष्प्रापयशाः प्रापत् आश्रमं श्रान्तवाहनः ।
सायं संयमिनस्तस्य महर्षेर्महिषीसखः ॥ ४८ ॥

**दुष्प्रापयशाः** - (பிறரால்) அடையமுடியாத புகழையுடையவனும், **श्रान्तवाहनः** - களைப்படைந்த குதிரைகளை

யுடையவனும், **महिषीसखः** - அரசியுடன் கூடியவனுமான, **सः** - அவன், **संयमिनः** - மன அடக்கமுடைய, **महर्षेः** - மஹரிஷியான வஸிஷ்டரின், **आश्रमं** - ஆசிரமத்தை, **सायं** - ஸாயங்காலத்தில், **प्रापत्** - அடைந்தான்.

(க-து) திலீபன் ஸாயங்காலம் வஸிஷ்டரின் ஆச்ரமத்தை அடைந்தான். அவனது குதிரைகள் களைப்படைந்திருந்தன.

वनान्तरादुपावृत्तैः समित्कुशफलाहरैः ।
पूर्यमाणमदृश्याग्निप्रत्युद्यातैस्तपस्विभिः ॥ ४९ ॥

**वनान्तरात्** - வேறுகாட்டினின்றும், **उपावृत्तैः** - திரும்பி வந்தவர்களும், **समित्-कुश-फल-आहरैः** - ஸமித்து, தர்ப்பம், பழம் இவைகளைக் கொண்டுவருபவர்களும், **अदृश्य-अग्नि-प्रत्युद्यातैः** - கண்களுக்குப் புலனாகாத-அக்னியினால்-எதிர் கொண்டு செல்லப்பட்டவர்களுமான, **तपस्विभिः** - தவசிகளால், **पूर्यमाणं** - நிரம்பிக்கொண்டிருப்பதுமான, **आश्रमं** - ஆச்ரமத்தை, **प्रापत्** - அடைந்தான்.

இதுமுதல் 53-வது சுலோகம்வரை 'ஆச்ரமத்தை அடைந்தான்' என்பதைச் சேர்த்து வாக்யத்தை முடிக்க வேண்டும்.

(க-து) திலீபன் ஆச்ரமம் சென்ற சமயத்தில், முனிவர்கள், தங்களது தபோவனத்திற்கு அருகிலுள்ள வேறு காடுகளிலிருந்து யாகாதிகளுக்கு வேண்டி ஸமித்து முதலியவைகளை எடுத்துக்கொண்டு திரும்பிவந்துகொண்டிருந்தனர். அவர்களால் அவ்வாச்ரமம் நிரம்பிக் கொண்டிருந்தது. அவர்களைக் கண்களுக்குப் புலப்படாது அக்னி தேவன் வரவேற்றான்,

யாகம் செய்பவர்கள் வெளியில் சென்று திரும்பும் பொழுது, அயல்நாடு சென்று திரும்பும் தந்தையை மக்கள் வரவேற்பதுபோல், அக்னிதேவன் வரவேற்பதாக வேதம் கூறுகின்றது. அவ்வாறு வரவேற்கின்ற அக்னி, கண்களுக்குப் புலனாகாது' இருக்கின்றது என்று கவி கூறுகிறார். பலாசமரம், அரசமரம் இவற்றின் சிறு குச்சி ஸமித்து எனப்படும்.

आकीर्णमृषिपत्नीनां उटजद्वाररोधिभिः
अपत्यैरिव नीवारभागधेयोचितैर्मृगैः ॥ ५० ॥

**नीवार-भागधेय-उचितैः**-காட்டு நெல்லின்-பங்கைப் பெறுவதில் - பழகியவைகளும்; **उटज-द्वार-रोधिभिः** - பர்ணசாலைகளின் வாசலை மறைத்துக்கொண் டிருப்பவைகளும், **ऋषि-पत्नीनां** - ரிஷிகளின் மனைவிகளுடைய, **अपत्यैः इव स्थितैः** - குழந்தைகள்போல் இருந்தவைகளுமான, **मृगैः** - மான்களால், **आकीर्णं** - நிறைந்த--ஆச்ரமத்தை அடைந்தான்.

(க-து) சாயங்காலத்தில் ஆச்ரமத்திலுள்ள மான்களுக்கு உணவாகக் காட்டுநெல் வைக்கப்படும். மான்கள் தங்களது பங்கைப் பெறுவதற்குப் பர்ணசாலையின் வாசலை அடைத்துக்கொண்டு நின்றன. நெற்பங்கீடு செய்கின்ற ரிஷிபத்னிகளின் குழந்தைகள்போல் அவைகள் காணப்பட்டன.

सेकान्ते मुनिकन्याभिः तत्क्षणोज्झितवृक्षकम् ।
विश्वासाय विहङ्गानाम् आलवालांबुपायिनाम् ॥ ५१ ॥

**सेकान्ते** - (ஜலம்) ஊற்றியபின், **मुनिकन्याभिः** - முனிவர்களின் பெண்களால், **आलवाल-अंबु-पायिनां** - பாத்தியிலுள்ள நீரைக் குடிகின்ற, **विहंगानां** - பறவைகளுக்கு, **विश्वासाय** - நம்பிக்கையின் பொருட்டு, **तत्क्षण-उज्झित-वृक्षकं** - அந்த க்ஷணத்திலேயே-விடப்பட்ட-சிறு விருக்ஷங்களையுடையதுமான-ஆச்ரமத்தை அடைந்தான்.

(க-து) ரிஷிகளின் பெண்கள் ஆச்ரமத்திலுள்ள சிறிய மரங்களுக்குப் பாத்தியமைத்து நீர் ஊற்றுவர். பாத்தியிலுள்ள நீரைக் குடிக்க விரும்பும் பறவைகள் அச்சமின்றி இருக்கவேண்டி அப் பெண்கள் நீர் ஊற்றிய மறுகணமே அம் மரத்தைவிட்டு விலகிச் செல்வர்.

திலீபன் சென்ற சமயம் அவ்வாச்ரமம் இருந்தவகை இச்சுலோகத்தில் கூறப்பட்டது.

आतपात्यय-संक्षिप्त-नीवारासु निषादिभिः ।
मृगैर्वर्तितरोमन्थं उटजांगनभूमिषु ॥ ५२ ॥

**आतप-अत्यय-संक्षिप्त-नीवारासु** - வெய்யில்-சென்றதால்-குவிக்கப்பட்ட-நீவார தான்யமுடைய, **उटज-अंगन-भूमिषु** - ஆச்ரமங்களின் முற்றங்களில், **निषादिभिः** - படுத்திருக்கின்ற, **मृगैः** - மான்களினால், **वर्तित-रोमन्थम्** - செய்யப்பட்ட அசை போடுதலை யுடையதுமான--ஆச்ரமத்தை அடைந்தான்.

(க-து) திலீபன் சென்றபொழுது சில மான்கள் ஆச்ரமங்களின் முற்றங்களில் படுத்து அசைபோட்டுக் கொண்டிருந்தன. அம் முற்றங்களில் உலர்த்தியிருந்த நீவார தான்யம், வெய்யில் சென்று விட்டதால் ஓரிடத்தில் குவிக்கப்பட்டிருந்தது.

अभ्युत्थिताग्निपिशुनैः अतिथीनाश्रमोन्मुखान् ।
पुनानं पवनोद्धूतैः धूमैराहुतिगन्धिभिः ॥ ५३ ॥

**अभ्युत्थित - अग्नि - पिशुनैः** - ஜ்வலிக்கின்ற-அக்னியைத் தெரிவிப்பவைகளும், **पवन-उद्धूतैः** - காற்றினால் அலைக்கப் பட்டவைகளும், **आहुति-गन्धिभिः** - ஹோமம் செய்யப்பட்ட பொருள்களின் வாசனை யுடையவைகளுமான, **धूमैः** - புகைகளால், **आश्रमोन्मुखान्** - ஆச்ரமத்தை நோக்கி வருகின்ற, **अतिथीन्** - அதிதிகளை, **पुनानं** - பரிசுத்தர்களாகச் செய்வது மான--ஆச்ரமத்தை அடைந்தான்.

(க-து) திலீபன் சென்றபொழுது ஆச்ரமத்தில் ஹோமம் நடந்துகொண்டிருந்தது. அக்னியிலிருந்து எழுந்த புகையில், ஹோமம் செய்யப்பட்ட நெய் முதலிய பொருள்களின் மணம் கமழ்ந்தது. காற்றில் சிதறிய அப் புகை ஆச்ரமத்தை நோக்கிவரும் அதிதிகளைப் பரிசுத்தர்களாக்கியது. அத்தகைய புண்யகரமான ஆச்ரமத்தை அரசன் அடைந்தான்.

अथ यन्तारमादिश्य धुर्यान् विश्रामयेति सः ।
तामवारोहयत् पत्नीं रथादवततार च ॥ ५४ ॥

**अथ** - பிறகு, **सः** - அவன், "**धुर्यान्** - குதிரைகளை, **विश्रामय** - களைப்பாறச் செய்", **इति** - என்று (கூறி), **यन्तारं** - தேரோட்டியை, **आदिश्य** - ஆக்ஞாபித்துவிட்டு,

**पत्नीं** - மனைவியான, **तां** - ஸுதக்ஷிணையை, **रथात्** - தேரினின்றும், **अवारोहयत्** - கீழ் இறக்கினான்; **स्वयं** - தானும், **अततार च** - இறங்கினான்.

(க-து) திலீபன் மனைவியை ரதத்தினின்றும் கீழே இறக்கிய பின் தான் இறங்கினான்.

तस्मै सभ्याः सभार्याय गोप्त्रे गुप्ततमेन्द्रियाः ।
अर्हणामर्हते चक्रुः मुनयो नयचक्षुषे ॥ ५५ ॥

**सभ्याः** - ஸபையில் இருக்கத்தக்கவர்களும். **गुप्ततम-इन्द्रियाः** - நன்கு அடக்கப்பட்ட இந்திரியங்களை யுடையவர்களுமான, **मुनयः** - முனிவர்கள், **सभार्याय** - மனைவியுடன் கூடியவனும், **गोप्त्रे** - ரக்ஷகனும், **नयचक्षुषे** - சாஸ்திரங்களையே கண்களாக உடையவனும், **अर्हते** - பூஜிக்கத்தக்கவனுமான, **तस्मै** - அவ்வரசன்பொருட்டு, **अर्हणां** - பூஜையை, **चक्रुः** - செய்தனர்.

(க-து) வசிஷ்டரின் ஆசிரமத்தில் இருந்த முனிவர்கள் எல்லோரும் ஸப்யர்கள்: உலகரீதியும் மரியாதையும் நன்கு அறிந்தவர்கள். இந்திரியங்களை யடக்கி ஆசையை விட்டவர்கள். அவர்கள், மனைவியுடன் வந்திருக்கின்ற திலீபனுக்கு மரியாதை செய்தனர். அவன் அவர்களுடைய ரக்ஷகன்; சாஸ்திரங்களினால் பெற்ற அறிவை கண்ணாகக்கொண்டு விஷயங்களை நோக்குகின்றவன்.

विधेः सायन्तनस्यान्ते स ददर्श तपोनिधिम् ।
अन्वासितमरुन्धत्या स्वाहयेव हविर्भुजम् ॥ ५६ ॥

**सः** - அவன், **सायन्तनस्य** - சாயங்காலத்திலுள்ள, **विधेः**- அனுஷ்டானத்தின், **अन्ते**-முடிவில், **अरुन्धत्या** - அருந்ததியியோடு, **अन्वासितम्** - அமர்ந்திருப்பவரும், **तपोनिधिं** - தவங்களுக்கு இருப்பிடமுமான வஸிஷ்டரை, **स्वाहया**-ஸ்வாஹா தேவியுடன் (இருக்கின்ற), **हविर्भुजं इव** - அக்னிதேவனைக் காண்பதுபோல், **ददर्श** - கண்டான்.

திலீபன், ஸாயங்காலத்தில் செய்யவேண்டிய ஜபம் மம் இவைகளைச் செய்தபின் மனைவியுடன் அமர்ந்திருந்த வஸிஷ்டரைக்கண்டான். வஸிஷ்டருக்கு அக்னியும் அருந்ததிக்கு ஸ்வாஹாதேவியும் பரிசுத்தமான தன்மையில் உபமானங்கள்.

तयोर्जगृहतुः पादान् राजा राज्ञी च मागधी ।
तौ गुरुर्गुरुपत्नी च प्रीत्या प्रतिननन्दतुः ॥ ५७ ॥

**मागधी** - மகதராஜன் குமாரியான, **राज्ञी** - அவ்வரசியும், **राजा च** - அரசனும், **तयोः** - அவ்விருவர்களின், **पादान्** - பாதங்களை, **जगृहतुः** - பற்றினார்கள்; **गुरुपत्नी** - குருபத்னியும், **गुरुः च** - குருவும், **तौ** - அவ்விருவர்களையும், **प्रीत्या** - அன்புடன், **प्रतिननन्दतुः** - கௌரவித்தார்கள்.

(க-து) ராஜதம்பதிகள் குருதம்பதிகளை வணங்கினர்; குருவும் குருபத்னியும் ராஜதம்பதிகளை ஆசீர்வதித்து வரவேற்றனர்.

तमातिथ्यक्रियाशान्तरथक्षोभपरिश्रमम् ।
पप्रच्छ कुशलं राज्ये राज्याश्रममुनिं मुनिः ॥ ५८ ॥

**मुनिः** - வசிஷ்டமுனிவர், **आतिथ्य-क्रिया-शान्त-रथ-क्षोभ-परिश्रमं** - அதிதிபூஜையினால் தணிந்த-ரதத்தின் அசைவினாலுண்டான-சிரமமுடையவனும், **राज्याश्रम-मुनिं** - ராஜ்யமாகிய ஆச்ரமத்தில் முனிவனுமான, **तं** - அவனை (அவனிடம்), **राज्ये** - ராஜ்யத்தில், **कुशलं** - க்ஷேமத்தைப்பற்றி, **पप्रच्छ** - கேட்டார்.

(க-து) திலீபனுக்கு ரதசலனத்திலுண்டான சிரமம் மஹரிஷியின் உபசாரத்தினால் நீங்கியது. மஹரிஷிபோல் மன அடக்கத்துடன் ராஜ்யபரிபாலனம் செய்யும் திலீபனிடம் ராஜ்யக்ஷேமத்தைப் பற்றி வசிஷ்டர் விசாரித்தார்.

अथाथर्वनिधेस्तस्य विजितारिपुरः पुरः ।
अर्थ्यामर्थपतिर्वाचम् आददे वदतां वरः ॥ ५९ ॥

**अथ** - பிறகு, **विजित अरि-पुरः** - ஜயிக்கப் ... களின் - நகரங்களையுடையவனும், **वदतां** - பேசுபவர்களில, **वरः** - சிறந்தவனுமான, **अर्थपतिः** - அரசன், **अथर्व निधेः** - அதர்வ வேதத்திற்கு நிதியான முனிவருக்கு, **पुरः** - எதிரில், **अर्थ्यां** - அர்த்தத்துடன்கூடிய, **वाचं** - வார்த்தையை, **आददे**- பேச ஆரம்பித்தான்.

(க-து) திலீபன் சத்ருக்களின் நகரங்களை வென்ற சூரன்; பேசுவதிலும் வல்லவன்; அதர்வ வேதத்தை நன்கறிந்த வஸிஷ்டரிடம், மிகைப்படுத்தாது, அர்த்தபுஷ்டியுள்ள வார்த்தைகளைக் கூறலானன்.

उपपन्नं ननु शिवं सप्तस्वंगेषु यस्य मे ।
दैवीनां मानुषीणां च प्रतिकर्ता त्वमापदाम् ॥ ६० ॥ 60

**यस्य** - யாதொரு, **मे** - எனக்கு, **दैवीनां** - தேவர்களிடமிருந்துண்டானவையும், **मानुषीणां च**-மனிதர்களிடமிருந்து வந்தவையுமான, **आपदां** - ஆபத்துக்களை, **त्वं** - தாங்கள், **प्रतिकर्ता** - நீக்குபவராக, **असि** - இருக்கின்றீர்களோ, (**तस्य**)- அப்படிப்பட்ட, **मे** - என்னுடைய, **सप्तसु** - ஏழு, **अंगेषु** - ராஜ்யாங்கங்களிலும், **शिवं** - க்ஷேமம், **उपपन्नं ननु** - (இருத்தல்) தகுந்ததே.

(க-து) "எனக்குத் தேவர்களாலும் மனிதர்களாலும் வரும் கஷ்டத்தை நீக்குபவர் தாங்களே. தங்களுடைய பாதுகாப்பில் இருக்கின்ற எனது ராஜ்யத்தில் நிரந்தரம் க்ஷேமம் இருத்தல் பொருத்தமானதே."

அரசன், மந்திரி, அரசனது நண்பர்கள், பொக்கிஷம், நாடு, அரண், சேனை என்ற இந்த ஏழும் ராஜ்யத்தின் அங்கங்களாகும். நெருப்பு, ஜலம், வியாதி, பஞ்சம், சாவு, இவைகள் தெய்வகோபத்தால் வரும் தீங்குகள். திருடர்கள், சத்ருக்கள், அரசாங்க உத்யோகஸ்தர்கள், பேராசை பிடித்த அரசன்-என்ற இவர்களும் ஜனங்களுக்குக் கஷ்டமளிப்பவர்கள்.

तव मन्त्रकृतो मन्त्रैः दूरात् प्रशमितारिभिः ।
प्रत्यादिश्यन्त इव मे दृष्टलक्ष्यभिदः शराः ॥ ६१ ॥

**दूरात्** - தொலைவிலிருந்தே, **प्रशमित-अरिभिः** - அடக்கப்பட்ட சத்ருக்களையுடைய, **मन्त्रकृतः** - வேதமந்திரங்களைக் கண்டவரான, **तव** - உங்களுடைய, **मन्त्रैः** - மந்திரங்களால், **दृष्ट-लक्ष्यभिदः** - பார்க்கப்பட்ட - குறியையே - அடிக்கின்ற, **मे** - என்னுடைய, **शराः** - அம்புகள், **प्रत्यादिश्यन्ते इव** - பயனற்றவைகளாகச் செய்யப்படுகின்றனபோலும்.

(க-து) "வேதத்தின் ஒரு பகுதிக்கு மந்திரம் எனப் பெயர். அம்மந்திரங்களைக்கண்டு அறிந்து முதன்முதலாக வெளியிட்ட மஹரிஷிகள் பலரில் வஸிஷ்டரும் ஒருவர். வஸிஷ்டரின் மந்திரங்கள் வெகு தொலைவில் இருந்துகொண்டே, திலீபனுடைய சத்ருக்களை— அவர்கள் கண்களுக்குப் புலப்படாவிடினும்—அழிக்கின்றன. திலீபனுடைய பாணங்களோ எதிரில் இருந்து காணப்படுகின்றவர்களைத் தான் அடிக்கும். திலீபனது பாணங்கள் செய்யும் வேலையை வஸிஷ்டரின் மந்திரங்கள் மிகத்திறமையுடன் செய்வதால் அவ்வம்புகள் பயனற்றவைகள்போல் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது. மனிதர்களால் வரும் விபத்துக்களை வஸிஷ்டர், மந்திரங்களின் மூலம் நிவிருத்தி செய்கின்றார் என்பது இச்சுலோகத்தில் கூறப்படும் கருத்தாகும்.

இனி, அடுத்துவரும் சுலோகத்தில் தேவர்களின் கோபத்தால் வரும் தீங்கு நீக்கப்படும் வகை தெரிவிக்கப்படுகின்றது.

हविरावर्जितं होतः, त्वया विधिवदग्निषु ।
वृष्टिर्भवति सस्यानां अवग्रहविशोषिणाम् ॥ ६२ ॥

**होतः** - ஹோமம் செய்கின்ற குருவே, **त्वया**- தங்களால், **विधिवत्** - சாஸ்திரத்தில் கூறியபடி, **अग्निषु** - அக்னிகளில், **आवर्जितं** - இடப்பட்ட, **हविः** - அவிசு, **अवग्रह विशोषिणां** - மழையின்மையால் உலருகின்ற, **सस्यानां** - பயிர்களுக்கு, **वृष्टिः** - மழையாக, **भवति** - ஆகின்றது.

(க-து) "தாங்கள் செய்யும் ஹோமத்தினால் கிடைத்த அவிசைப் பெற்றுத் தேவர்கள் சந்தோஷித்து மழை அளிக்கின்றனர். தாங்கள் ஹோமம் செய்யாவிடின் மழையிராது. பயிர்கள் வாடும்.

पुरुषायुषजीविन्यः निरातंका निरीतयः ।
यन्मदीयाः प्रजास्तस्य हेतुस्त्वद्ब्रह्मवर्चसम् ॥ ६३ ॥

**मदीयाः** - என்னுடைய, **प्रजाः** - பிரஜைகள், **पुरुषायुषजीविन्यः** - மனிதர்களின் முழு ஆயுளும் வாழ்கின்றவர்களாகவும், **निरातंकाः** - அச்சமற்றவர்களாகவும், **निरीतयः** - ஈதி பாதையற்றவர்களாகவும், **सन्ति** - இருக்கின்றனர், **इति यत्** - என்று யாதொரு விஷயம் இருக்கின்றதோ, **तस्य** - அதற்கு எல்லாம், **त्वद्ब्रह्मवर्चसम्** - தங்களுடைய பிரம்ம தேஜஸே, **हेतुः** - காரணம்.

(க-து) "எனது பிரஜைகள் மனிதர்களுக்கு உரிய முழு ஆயுளாகிய நூறு வருஷம் வாழ்கின்றனர். அவர்களுக்கு எவ்வகையான ஆபத்துக்களிலிருந்தும் அச்சமில்லை. ஈதியின் உபத்ரவமும் இல்லை. இவ்வாறு அவர்கள் வாழ்வதற்குத் தங்களது தவமே காரணம்.

'அதிகமழை, மழையின்மை, எலி, வெட்டுக்கிளி, கிளி இவைகளால் வரும் துன்பம் ஈதிபாதையாகும். எலியும் கிளியும் வயலிலுள்ள தான்யத்தைத் தின்றுவிடும்; வெட்டுக்கிளி பயிரையே வெட்டி அழிக்கும்.'

त्वयैवं चिन्त्यमानस्य गुरुणा ब्रह्मयोनिना ।
सानुबन्धाः कथं न स्युः संपदो मे निरापदः ॥ ६४ ॥

**ब्रह्मयोनिना** - பிரம்மதேவரின் புதல்வரும், **गुरुणा** - குருவுமான, **त्वया** - தங்களால், **एवं** - இவ்வாறு, **चिन्त्यमानस्य** - நினைக்கப்படுகின்றவனும், **निरापदः** - ஆபத்துக்களற்றவனுமான, **मे** - என்னுடைய, **संपदः** - செல்வங்கள், **सानुबन्धाः** - தொடர்ந்தவைகளாக, **कथं** - எவ்வாறு, **न स्युः** - இராமற்போம்?

(க-து) "பிரம்மபுத்ரரான தாங்கள் என்னைப்பற்றிச் சிரத்தை யுடனிருப்பதால் நான் நன்கு பாதுகாக்கப்பட்டு ஆபத்தின்றி இருக்கின்றேன். எனது செல்வங்களும் ஆபத்தின்றி இருக்கின்றன. ஆகையால் அச்செல்வங்கள் மேன்மேலும் விருத்தியாகின்றன.

किन्तु वध्वां तवैतस्याम् अदृष्टसदृशप्रजम् ।
न मामवति सद्वीपा रत्नसूरपि मेदिनी ॥ ६५ ॥ 65

**किन्तु** - ஆனால், **तव** - உங்களுடைய, **एतस्यां** - இந்த, **वध्वां** - மருமகளான ஸுதக்ஷிணையிடத்தில், **अदृष्ट - सदृश-प्रजम्** - காணப்பெறாத தக்க மகனையுடைய, **मां** - என்னை, **सद्वीपा अपि** - பல தீவுகளோடு கூடியதாயினும், **रत्नसूरपि** - ரத்னங்களை யளிப்பதாயினும், **मेदिनी** - இப்பூமி, **न अवति** - மகிழ்விக்கவில்லை.

(க-து) "ஸுதக்ஷிணையிடத்தில் எனக்கு எல்லாவகையிலும் தகுந்த ஒரு மகன் பிறவாததால் பெருஞ்செல்வம் நிறைந்த இப்பூமியும் என்னை மகிழ்விக்கவில்லை.

नूनं मत्तः परं वंश्याः पिण्डविच्छेददर्शिनः ।
न प्रकामभुजः श्राद्धे स्वधासंग्रहतत्पराः ॥ ६६ ॥ 66

**मत्तः परं** - எனக்குப்பின், **पिण्ड विच्छेद-दर्शिनः** - பிண்டம் அற்றுப்போதலை எதிர்பார்த்த, **वंश्याः** - (எனது வம்சத்து) பித்ருக்கள், **स्वधा-संग्रह-तत्पराः** - ஸ்வதையைச் சேமிப்பதில் கருத்துடையவர்களாக இருந்துக்கொண்டு, **श्राद्धे** - சிராத்தத்தில், **प्रकामभुजः** - போதுமான அளவு உண்பவர்களாக, **न भवन्ति** - இல்லை; **नूनम्** - இஃது உண்மை.

(க-து) "எனது பித்ருக்கள், நான் இறந்தபின், என் வம்சத்தில் பித்ருக்களுக்குச் சிராத்தம் செய்பவர்கள் இல்லாததால் தங்களுக்குப் பிண்டம் கிடைக்காதென்று எண்ணி நான் சிராத்தத்தில் அளிப்பதை முழுவதும் சாப்பிடாது, பிற்காலத்திற்காகச் சேர்த்து வைத்துக் கொள்ளுகின்றனர்.

'பிண்டம், ஸ்வதா என்ற இவ்விரண்டு சொல்லும் பித்ருக்களுக்குச் சிராத்தத்தில் அளிக்கப்படும் உணவைக் குறிக்கும்;

இறந்த முன்னோர்கள் பித்ருக்கள் எனப்படுவர்.

मत्परं दुर्लभं मत्वा नूनमावर्जितं मया ।
पयः पूर्वैः स्वनिःश्वासैः कवोष्णमुपभुज्यते ॥ ६७ ॥

मत्परं - எனக்குப்பின், दुर्लभं - கிடைப்பதற் கரிதென, मत्वा - எண்ணி, मया - என்னால், आवर्जितं - கொடுக்கப்பட்ட, पयः - தர்ப்பண ஜலமானது, पूर्वैः - பித்ருக்களால், स्वनिःश्वासैः - தங்களது மூச்சுக்காற்றினால், कवोष्णं - சிறிது உஷ்ணமானதா யிருக்கும்படி, उपभुज्यते - அனுபவிக்கப்படு கின்றது; नूनम् இது உண்மையே

(க-து) "எனக்குப்பின் தர்ப்பணம் செய்பவர்கள் இல்லாமை யால் தர்ப்பண ஜலம் கிடைக்காது என எண்ணித் துக்கத்தினால் எனது பித்ருக்கள் பெருமூச்சு விடுகின்றனர். அப்பெருமூச்சினால் நான் அளிக்கும் குளிர்ந்த ஜலமும் சிறிது உஷ்ணமாக்கப்படுகிறது. அந்த நீரையே அவர்கள் பருகுகின்றனர் என நினைக்கின்றேன்.

सोऽहमिज्याविशुद्धात्मा प्रजालोपनिमीलितः ।
प्रकाशश्चाप्रकाशश्च लोकालोक इवाचलः ॥ ६८ ॥

इज्या-विशुद्ध-आत्मा - யாகத்தினால் பரிசுத்தமான ஆத் மாவை யுடையவனும், प्रजा-लोप-निमीलितः - ஸந்ததி இன் மையால் இருளடைந்தவனுமான, सोऽहं-அத்தகைய நான், लोकालोकः - லோகாலோகம் என்ற, अचलः इव - மலைபோல், प्रकाशः - ஒளியுடையவனாகவும், अप्रकाशश्च - ஒளியற்றவ னாகவும், अस्मि - இருக்கின்றேன்.

(க-து) "நான் யாகம்செய்து, தேவர்களுக்குச் செய்யவேண் டிய கடமையைச்செய்து, பரிசுத்தமான ஆத்மாவுடையவன்; அதனால் சந்தோஷமடைகின்றேன். ஸந்ததியின்மையால் நான் பித்ருக்களுக் குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யாததால் வருந்துகின்றேன்.

இந்நிலையில் சந்தோஷமும் வருத்தமும் உடைய நான், ஒளியும் இருளுமுடைய லோகாலோக மலைபோல் இருக்கின்றேன்.

'திசையின் கோடியில் லோகாலோகம் என ஒரு மலை இருப்பதாகவும், அதன் ஒருபுறத்தில் மாத்திரமே சூரியனுடைய வெளிச்சமுண்டென்றும், மறுபுறம் ஒளியில்லை என்றும் புராணம் கூறுகின்றது.

'பிறக்கும்பொழுதே மனிதன், தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள் இம்மூவருக்கும் செய்யவேண்டிய மூன்று கடனுடையவனாகப் பிறக்கின்றான். யாகஞ்செய்வதால் தேவர்களுடைய கடனும், சாஸ்திரங்களைப் படிப்பதால் ரிஷிகளின் கடனும், சந்ததியை யடைவதால் பித்ருக்களின் கடனும் தீருமென்பர்.'

लोकान्तरभवं पुण्यं तपोदानसमुद्भवम् ।
सन्ततिः शुद्धवंश्या हि परत्रेह च शर्मणे ॥ ६९ ॥

**तपो-दान-समुद्भवं** - தவம், தானம் இவைகளால் உண்டாகின்ற, **पुण्यं** - புண்யமானது, **लोकान्तरसुखम्** - மறுஉலகத்தில் சுகமளிப்பதாகின்றது. **शुद्धवंश्या** - பரிசுத்தமான குலத்தில் தோன்றிய, **सन्ततिः हि** - ஸந்ததியோ, **परत्र** - மறுஉலகிலும், **इह च** - இவ்வுலகிலும், **शर्मणे** - நன்மையைக் கொடுப்பதாக, **भवति** - இருக்கிறது.

(க-து) "தவம், தானம் இவையெல்லாம் மறுஉலகத்திற்கே பயனளிக்கும். நல்ல புத்திரனோ இம்மை மறுமை என்ற இரண்டிலும் நன்மை யளிப்பான்.

तया हीनं विधातर्मां कथं पश्यन् न दूयसे ।
सिक्तं स्वयमिव स्नेहात् वन्ध्यमाश्रमवृक्षकम् ॥ ७० ॥

**विधातः** - படைக்கும் திறன்பெற்ற மஹரிஷியே, **तया हीनं** - ஸந்ததியற்ற, **मां** - என்னை, **स्नेहात्** - அன்புடன், **स्वयं** - தாமே, **सिक्तं** - ஜலம் ஊற்றிவளர்த்த, **वन्ध्यं** பயனற்ற **आश्रम वृक्षकं इव** - ஆச்ரமத்தின் சிறியமரத்தைக் காண்பது

போல், **पश्यन्** - காண்கின்ற நீர், **कथं** - எவ்வாறு, **न दूयसे** - வருந்தவில்லை ?

(க-து) தாங்களே ஜலம் ஊற்றிவளர்த்த ஆச்ரமமரம் பழமற்ற தாயின் வருந்துவீர்களல்லவா ? அதுபோல் தங்களாலே பாதுகாக்கப் பட்டு இருக்கின்ற நான் ஸந்ததியின்றி இருப்பதைக்கண்டு வருந் தாமலிருப்பீர்களோ ?

असह्यपीडं भगवन् ऋणमन्त्यमवेहि मे ।
अरुन्तुदमिवालानम् अनिर्वाणस्य दन्तिनः ॥ ७१ ॥

**भगवन्** - ஸ்வாமியே, **मे** - எனக்கு, **अन्त्यं** - கடைசி யான, **ऋणं** - பித்ருருணத்தை—**अनिर्वाणस्य** - குளிக்காத, **दन्तिनः** - யானைக்கு, **अरुन्तुदं** கஷ்டமளிக்கின்ற, **आलानं इव**- (அது கட்டப்பட்டிருக்கும்) தூண்போல,—**असह्यपीडं** - ஸஹிக்கமுடியாத துன்பமளிப்பதாக, **अवेहि** - அறிந்து கொள்ளுங்கள்.

(க-து) "எனது மூன்று கடன்களில் இரண்டு தீர்க்கப் பட்டன. மூன்ருவதான பித்ருக்களின் கடனே பாக்கியுள்ளது. அது ஸந்ததியைப் பெறுவதின்மூலமே தீர்க்கமுடியும். குளிக்க விரும்புகின்ற யானைக்கு—அது தூணில் கட்டப்பட்டிருப்பின்—அத் தூண் எவ்வாறு மனவருத்தத்தை யளிக்குமோ அவ்வாறே கடனி லிருந்து விடுபட விரும்புகின்ற நான் விடுதலைபெருமல் இருப்பது எனக்குத் தாங்கமுடியாத துக்கத்தைக் கொடுக்கின்றது.

तस्मान्मुच्ये यथा तात संविधातुं तथार्हसि ।
इक्ष्वाकूणां दुरापेऽर्थे त्वदधीना हि सिद्धयः ॥ ७२ ॥

**तात** - தந்தையே, **तस्मात्** - அக்கடனிலிருந்து, **यथा** - எவ்வாறு, **मुच्ये**-விடுபடுவேனே, **तथा** - அவ்வாறு, **संविधातुं** - செய்வதற்கு, **अर्हसि** - நீர் தகுந்தவராகின்றீர். **इक्ष्वाकूणां** - இக்ஷ்வாகு வம்சத்தவர்களுக்கு, **दुरापे** - அடைய முடியாத, **अर्थे** - விஷயத்தில், **सिद्धयः** கார்யஸித்திகள், **त्वदधीना हि**- உமது வசத்திலன்றே இருப்பன.

(க-து) "நான் அக்கடனிலிருந்து விடுதலை பெறும்படியான உபாயத்தை நீங்கள் எனக்குச் செய்யவேண்டும். எனது முன்னோர்கள் யாவருக்கும் காரியம் கைகூடும்படி செய்பவர் தாங்களே."

इति विज्ञापितो राज्ञा ध्यानस्तिमितलोचनः ।
क्षणमात्रमृषिस्तस्थौ सुप्तमीन इव ह्रदः ॥ ७३ ॥

**इति** - இவ்வாறு, **राज्ञा** - அரசனால், **विज्ञापितः** - தெரிவிக்கப்பட்ட, **ऋषिः** - மஹரிஷி, **ध्यान-स्तिमित-लोचनः** - தியானத்தினால் சலனமற்ற கண்களையுடையவராய், **सुप्तमीनः** - தூங்கிய மீனையுடைய, **ह्रदः इव** - தடாகம்போல், **क्षणमात्रं** - ஒருக்ஷணநேரமே, **तस्थौ** - இருந்தார்.

(க-து) மஹரிஷி சிறிதுநேரம் கண்மூடித் தியானம் செய்து ஆலோசித்தார்.

सोऽपश्यत् प्रणिधानेन सन्ततेः स्तम्भकारणम् ।
भावितात्मा भुवो भर्तुः अथैनं प्रत्यबोधयत् ॥ ७४ ॥

**सः** - அவர், **प्रणिधानेन**-மன ஒருமையினால், **भावितात्मा**- பரிசுத்தமான மனமுடையவராக, **भुवः**-பூமியின், **भर्तुः**-நாதனாகிய அரசனுக்கு, **सन्ततेः** - ஸந்ததி(யின்), **स्तंभकारणं** - நின்றதன் காரணத்தை, **अपश्यत्** - கண்டார்; **अथ** - பிறகு, **एनं** - அவனுக்கு, **प्रत्यबोधयत्** - அறிவித்தார்.

(க-து) வஸிஷ்டர் தியானம்செய்து, அரசனுக்குச் சந்ததி இல்லாததன் காரணத்தைக்கண்டு அவனுக்குக் கூறலானார்.

पुरा शक्रमुपस्थाय तवोर्वीं प्रतियास्यतः ।
आसीत् कल्पतरुच्छायां आश्रिता सुरभिः पथि ॥ ७५ ॥

**पुरा** - முன்பு, **शक्रं** - இந்திரனை, **उपस्थाय** - உபகரித்தபின், **उर्वीं प्रति** - பூலோகத்தைக் குறித்து, **यास्यतः** – வருகின்ற, **तव** - உன்னுடைய, **पथि** - வழியில், **कल्पतरुच्छायां** - கற்பகத் தருவின் நிழலை, **आश्रिता** - அடைந்ததாக, **सुरभिः** - காமதேனு, **आसीत्** - இருந்தது.

(க-து) "நீ ஸ்வர்க்கம் சென்று, தேவேந்திரனுக்கு உதவிய பின், பூலோகத்திற்குத் திரும்பிவரும் வழியில் கற்பக மர நிழலில் காமதேனு இருந்தது.

* * * *

प्रदक्षिणक्रियार्हायां तस्यां त्वं साधु नाचरः ॥ ७६ ॥

**प्रदक्षिण - क्रिया - अर्हायां** - பிரதக்ஷிணம் செய்யத்தக்க, **तस्यां** - அக்காமதேனுவின் விஷயத்தில், **त्वं** - நீ, **साधु** - நன்ருக, **न आचरः** - நடந்துகொள்ளவில்லை.

(க-து) "நீ அதைப் பிரதக்ஷிணம் செய்துவிட்டு வந்திருக்க வேண்டும்; அவ்வாறு நீ செய்யவில்லை.

வழியில் பசு இருக்குமாயின் அது நமது வலதுபுறத்தில் இருக்கும்படி நாம் செல்லவேண்டும் என சாஸ்திரம் கூறும்.

'अवजानासि मां यस्मात् अतस्ते न भविष्यति ।
मत्प्रसूतिमनाराध्य प्रजे'ति त्वां शशाप सा ॥ ७७ ॥

'**यस्मात्** - எக்காரணத்தினுல், **मां** - என்னை, **अवजानासि**- அவமதிக்கின்ருயோ, **अतः** - அக்காரணத்தினுல், **मत्प्रसूतिं** - எனது ஸந்ததியை, **अनाराध्य** - ஆராதிக்காமல், **ते** - உனக்கு, **प्रजा** - ஸந்ததி, **न भविष्यति** - உண்டாகாது', **इति** - என்று, **सा** - அக்காமதேனு, **त्वां** - உன்னை, **शशाप** - சபித்தது.

(க-து) 'நீ என்னை அவமதித்ததால், எனது ஸந்ததியை பூஜித்தாலன்றி உனக்கு ஸந்ததி உண்டாகாது' என அது உனக்குச் சாபம் கொடுத்தது.

स शापो न त्वया राजन् न च सारथिना श्रुतः ।
नदत्याकाशगंगायाः स्रोतस्युद्दामदिग्गजे ॥ ७८ ॥

**राजन्** - அரசனே, **सः शापः** - அச்சாபமானது, **उद्दाम-दिग्गजे** - விளையாடுகின்ற திக்கஜங்களையுடைய, **आकाश-गंगायाः** - ஆகாசகங்கையின், **स्रोतसि** - பிரவாஹம், **नदति**- சத்தமிடும்பொழுது, **त्वया** - உன்னுல், **न श्रुतः** - கேட்கப்பட

வில்லை; **सारथिना** - உனது தேரோட்டியாலும், **न च श्रुतः** - கேட்கப்படவில்லை.

(க-து) "ஆகாச கங்கையின் பிரவாக ஓசையில் அச்சாபம் உன் காதிலும் விழவில்லை. உனது சாரதியும் கேட்கவில்லை.

ईप्सितं तदवज्ञानात् विद्धि सार्गळमात्मनः ।
प्रतिबध्नाति हि श्रेयः पूज्य-पूजा व्यतिक्रमः ॥ ७९ ॥

**तदवज्ञानात्** - காமதேனுவை அவமதித்த காரணத்தினால், **आत्मनः** - உனது, **ईप्सितं** - விருப்பத்தை, **सार्गळं** - தடையுடன் கூடியதாக, **विद्धि** - அறிந்துகொள். **पूज्य - पूजा-व्यतिक्रमः** - பூஜிக்கத்தக்கவர்களை பூஜிக்காமல் இருப்பது, **श्रेयः** - நன்மையை, **प्रतिबध्नाति हि** - தடுக்குமல்லவா.

(க-து) "காமதேனுவை நீ அவமதித்ததால் உனது விருப்பம் நிறைவேறு திருக்கின்றது. மரியாதைக் குரியவர்களை அவமதிப்பது வரவேண்டிய நன்மைக்குத் தடையாகும்.

हविषे दीर्घसत्रस्य सा चेदानीं प्रचेतसः ।
भुजंग-पिहित-द्वारं पातालमधितिष्ठति ॥ ८० ॥

**सा च** - அக்காமதேனுவும், **इदानीं** - இப்பொழுது, **दीर्घसत्रस्य** - நெடுநாட்களில் செய்யத்தக்க யாகமுடைய, **प्रचेतसः** - வருணனுக்கு, **हविषे** - ஹவிஸைக் கொடுப்பதற்காக, **भुजंग पिहित द्वारं** - பாம்புகளால் தடுக்கப்பட்ட வாசலையுடைய, **पातालं** - பாதாளலோகத்தில், **अधितिष्ठति** - இருக்கின்றது.

(க-து) "நெடுநாள் செய்யவேண்டிய ஸத்ரம் என்ற ஒரு வகை யாகத்தை வருணன் செய்கின்றான். அதற்கு வேண்டிய ஹோம த்ரவ்யங்களைக் கொடுப்பதற்காகக் காமதேனு இப்பொழுது பாதாளத்தில் வசிக்கின்றது. பாதாளத்தின் வாசல் பாம்புகளால் பாதுகாக்கப்பட்டிருப்பதால் அங்கு செல்வதும் உனக்குச் சாத்யமில்லை.

सुतां तदीयां सुरभेः कृत्वा प्रतिनिधिं शुचिः ।
आराधय सपत्नीकः प्रीता कामदुघा हि सा ॥ ८१ ॥

**तदीयां** - காமதேனுவினுடைய, **सुतां** - பெண்ணான நந்தினி என்ற பசுவை, **सुरभेः** - காமதேனுவிற்கு, **प्रतिनिधिं**- பிரதிநிதியாக, **कृत्वा** - வைத்து, **शुचिः** - பரிசுத்தனாகவும், **सपत्नीकः** - மனைவியுடன் கூடியவனாகவும், **सन्** - இருந்து கொண்டு, **आराधय** - பூஜைசெய்; **हि** - ஏனெனில், **सा** - அந்த நந்தினி, **प्रीता** - ஸந்தோஷமடைந்ததாய், **कामदुघा** - வேண்டியதைக் கொடுக்கும்.

(க-து) "காமதேனுவின் பெண் நந்தினி எனது ஆச்ரமத்திலிருக்கின்றது. காமதேனுவிற்குப் பதிலாக அதை பூஜித்துவா; அது நீ விரும்பியதை அளிக்கும்."

इति वादिन एवास्य होतुराहुतिसाधनम् । 82
अनिन्द्या नन्दिनी नाम धेनुराववृते वनात् ॥ ८२ ॥

**इति** - இவ்வாறு, **वादिनः एव** - பேசிக்கொண்டே இருப்பவரும், **होतुः** - தினம்தோறும் ஹோமம் செய்பவருமான, **अस्य** - அவ்வவஸிஷ்டரின், **आहुति साधनं** - ஹோமத்திற்கு ஸாதனமும், **नन्दिनी नाम** - நந்தினி எனப்பெயர் பெற்றதும், **अनिन्द्या** - சிறந்ததுமான, **धेनुः** - பசு, **वनात्** - காட்டிலிருந்து, **आववृते** - திரும்பி வந்தது.

(க து) இவ்வாறு வஸிஷ்டர் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே நந்தினி மேய்ந்துவிட்டுக் காட்டினின்றும் திரும்பி வந்தது.

இதற்கு அடுத்து வருகின்ற மூன்று சுலோகங்களும் நந்தினியைப் பற்றிக் கூறுபவை.

ललाटोदयमाभुग्नम् पल्लवस्निग्धपाटला । 83
बिभ्रती श्वेतरोमाङ्कं सन्ध्येव शशिनं नवम् ॥ ८३ ॥

**पल्लव-स्निग्ध पाटला** - துளிர்போல் அழகான சிவப்பு நிறமுடையதும், **ललाटोदयं** - நெற்றியில் தோன்றிய, **आभुग्नं** - சிறிது வளைந்த, **श्वेतरोमाङ्कं** - வெண்ணிற ரோமங்களின

லுண்டான அடையாளத்தை, **बिभ्रती** - தாங்கியதுமான- நந்தினி, **नवं** - புதிய **शशिनं** - சந்திரனை, (**बिभ्रती**) உடைய, **सन्ध्या इव** - ஸந்தியாகாலம்போல், (**आववृते**) - வந்தது.

(க-து) நந்தினி இளந்துளிர்போல் அழகான சிவந்த நிறமுடையது. அதனது நெற்றியில் வெண்ணிற ரோமங்கள் இருந்தன. நெற்றியிலிருந்த வெண்ணிறம் இளம்பிறைபோல் விளங்கிருந்தது. அவ்வாறு இருந்த நந்தினி, அப்பொழுதே தோன்றிய இளம்பிறையுடன் கூடிய சிவந்த ஸாயங்காலம்போல் காணப்பட்டது. நந்தினிக்குச் சிவந்த ஸந்தியாகாலமும், நெற்றியிலுள்ள வெண்ணிற அடையாளத்திற்கு இளம் சந்திரனும் உபமானங்கள்.

भुवं कोष्णेन कुण्डोध्नी मेध्येनावभृथादपि ।
प्रस्रवेनाभिवर्षन्ती वत्सालोकप्रवर्तिना ॥ ८४ ॥

**कोष्णेन** - சிறிது சூடாக இருப்பதும், **अवभृथादपि** - அவப்ருதத்தைக் காட்டிலும், **मेध्येन** - பரிசுத்தமானதும், **वत्सालोकप्रवर्तिना** - கன்றைக் கண்டதினால் தோன்றியதுமான, **प्रस्रवेन** பால் பெருக்கினால், **भुवं**-பூமியை, **अभिवर्षन्ती**- நனைத்துக்கொண்டு, **कुण्डोध्नी**-குடம்போல் மடியையுடைய நந்தினி வந்தது.

(க-து) கன்றைக் கண்டதனால் அந் நந்தியின் மடியிலிருந்து பால் தானே பெருகித் தரையை நனைத்தது. மடியிலிருந்து அப்பொழுதே வெளிவந்ததால் சிறிது சூடாக அப்பால் இருந்தது. யாகத்தின் முடிவில் செய்யப்படும் ஸ்நானத்தை அவப்ருத ஸ்நானம் என்பர். அது ஸகல பாபங்களையும் போக்கிப் புண்யத்தை யளிக்கும். நந்தினியின் பால் பாபத்தைப் போக்குவதிலும் புண்யத்தைக் கொடுப்பதிலும் அவப்ருத ஸ்நானத்தைக் காட்டிலும் சிறந்தது. நந்தினியின் மடி, குடம்போல் பெரியதாக இருந்தது.

रजःकणैः खुरोद्धूतैः स्पृशद्भिर्गात्रमन्तिकात् ।
तीर्थाभिषेकजां शुद्धिम् आदधाना महीक्षितः ॥ ८५ ॥

**खुरोद्धूतैः** - குளம்புகளால் கிளப்பப்பட்டவைகளும், **अन्तिकात्** - ஸமீபத்திலிருப்பதால், **गात्रं** - (அரசனுடைய சரீரத்தை, **स्पृशद्भिः** - ஸ்பர்சிக்கின்றவைகளுமான, **रजः कणैः**

புழுதியின், துகள்களால், **महीक्षितः** - அரசனுக்கு, **तीर्थाभिषेकजां** - புண்ய தீர்த்தஸ்நாநத்தினல் உண்டாகும், **शुद्धिं** - பரிசுத்தியை, **आदधाना** செய்கின்றதாக-நந்தினி வந்தது.

(க-து) நந்தினியின் குளம்புகளால் கிளப்பப்பட்ட புழுதி அதன் அருகில் இருந்த அரசன் சரீரத்தில் பட்டது. அதனுல் அவன் புண்ய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்வதால் ஏற்படும் பரிசுத்தத்தன்மையைப் பெற்ருன். ஏனெனில் பசுவின் புழுதி படுவதை, பரிசுத்தத்தன்மையை யளிக்கும் ஒரு வகை ஸ்நாநமாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

तां पुण्यदर्शनां दृष्ट्वा निमित्तज्ञः तपोनिधिः ।
याज्यमाशंसितावन्ध्य-प्रार्थनं पुनरब्रवीत् ॥ ८६ ॥ 86

**निमित्तज्ञः** - சகுனத்தையறிந்த, **तपोनिधिः** - வஸிஷ்டர், **पुण्यदर्शनां** - புண்யகரமான தர்சனமுடைய, **तां** - அந்நந்தினியை, **दृष्ट्वा** - கண்டு, **आशंसित अवन्ध्य-प्रार्थनं**-விரும்பிய விஷயத்தில் பயனேடுகூடிய வேண்டுகோளையுடையவனும், **याज्यं** - (தம்மால்) யாகம் செய்துவைக்கத் தக்கவனுமான அரசனை நோக்கி, **पुनः** - மறுபடியும், **अब्रवीत्** - சொன்னுர்.

(க-து) நந்தினியைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே அது வந்தது ஒரு சுபசகுனமாகும். அவ்வாறு நேர்ந்த சகுனம் அரசனுடைய விருப்பம் நிறைவேறு மென்பதைக் காட்டியது. சகுனமறிந்த வஸிஷ்டா, திலீபனை நோக்கி மேலும் கூறினுர்.

अदूरवर्तिनीं सिद्धिं राजन् विगणयात्मनः ।
उपस्थितेयं कल्याणी नाम्नि कीर्तित एव यत् ॥ ८७ ॥ 87

**राजन्** - அரசனே, **यत्** - யாதொரு காரணத்தினல், **कल्याणी** - மங்களகரமான, **इयं** - இப்பசு, **नाम्नि** - (அதன்) பெயர், **कीर्तिते एव** - சொல்லப்பட்டபொழுதே, **उपस्थिता** - வந்திருக்கின்றதோ, **तत्** - அதனுல், **आत्मनः** - உனது, **सिद्धिं** - விருப்பம் நிறைவேறுதலை, **अदूरवर्तिनीं** - ஸமீபத்தில் இருப்பதாக, **विगणय** - அறிந்துகொள்.

(க-து) "அரசனே, அதன் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே நந்தினி வந்தது. இதனின்றும் உனது விருப்பம் சீக்ரமே கைகூடுமென எண்ணலாம்.

वन्यवृत्तिरिमां शश्वत् आत्मानुगमनेन गाम् ।
विद्यामभ्यसनेनेव प्रसादयितुमर्हसि ॥ ८८ ॥

**वन्य-वृत्तिः** - காட்டிலுள்ள பொருள்களையே உணவாகக் கொண்டவனாய், **इमां** - இந்த, **गां** - பசுவை, **शश्वत्** - எப்பொழுதும், **आत्मानुगमनेन** - நீ பின்தொடர்வதன் மூலம், **अभ्यसनेन** - அப்யாசத்தினால், **विद्यामिव** - கல்வியை வசப்படுத்திக்கொள்வதுபோல, **प्रसादयितु** - அருளுடையதாகச் செய்ய, **अर्हसि** - தகுந்தவனாகின்றாய்.

(க-து) 'ஸதாகாலமும் பயிலுவதால் கல்வி தெளிவை யடைகிறது. அதுபோல் எப்பொழுதும் பின்தொடர்ந்து உபசரிப்பதால் இதுவும் அருளுடையதாகும். காட்டிலுண்டான பழம் காய் கிழங்குகளையே ஆஹாரமாகக் கொள்வாயாக.

प्रस्थितायां प्रतिष्ठथाः स्थितायां स्थितिमाचरेः ।
निषण्णायां निषीदास्यां पीताम्भसि पिबेरपः ॥ ८९ ॥

**अस्यां** - இந்த நந்தினி, **प्रस्थितायां**-புறப்பட்டபொழுது, **प्रतिष्ठेथाः** - நீயும் புறப்படு; **स्थितायां** - நிற்கும்பொழுது. **स्थितिं** - நிற்பதை, **आचरेः** - செய்; **निषण्णायां** - படுத்தபொழுது, **निषीद** - உட்கார்; **पीताम्भसि** - தண்ணீர் குடிக்கும்பொழுது, **अपः** - தண்ணீரை, **पिबेः** - குடிப்பாயாக.

(க-து) "பசுவிற்கு எல்லாவகையாலும் பணிவிடை செய்; அதன் நிழல்போல் நடந்துகொள்.

वधूर्भक्तिमती चैनाम् अर्चितामा तपोवनात् ।
प्रयता प्रातरन्वेतु सायं प्रत्युद्व्रजेदपि ॥ ९० ॥

**वधूः च** - (உனது) மனைவியும், **भक्तिमती** - பக்தியுடையவளாகவும், **प्रयता**-பரிசுத்தமுடையவளாகவும், **सती**-இருந்து

கொண்டு, **अर्चितां** - பூஜிக்கப்பட்ட, **एनां**-இப்பசுவை, **प्रातः** - காலையில், **आ तपोवनात्** - தபோவன எல்லைவரை, **अन्वेतु** - பின்தொடர்ந்து செல்லட்டும்; **सायं अपि** - ஸாயங்காலத்திலும், **प्रत्युद्व्रजेत्** - எதிர்கொண்டு செல்லவேண்டும்.

(க-து) "உனது மனைவி பக்தியுடனும் பரிசுத்தியுடனும் இருந்துகொண்டு இப்பசுவைப் புஷ்பங்களால் பூஜித்துவிட்டுக் காலையில், மேய்வதற்கு இது காட்டிற்குப் போகும்பொழுது தபோவன எல்லைவரை பின்தொடர்ந்து செல்லவேண்டும். ஸாயங்காலத்திலும் தபோவன எல்லை சென்று எதிர்கொண்டு அழைத்து வரவேண்டும்.

इत्या प्रसादादस्यास्त्वम् परिचर्यापरो भव ।
अविघ्नमस्तु ते स्थेयाः पितेव धुरि पुत्रिणाम् ॥ ९१ ॥

**इति** - இம்முறையாக, **त्वं** - நீ, **आ प्रसादात्** - அருள் கிட்டும்வரை, **अस्याः** - இப்பசுவின், **परिचर्यापरः** - பணிவிடையில் ஊக்கமுடையவனாக, **भव** - இரு; **ते** - உனக்கு, **अविघ्नं** - இடையூறின்மை, **अस्तु** - இருக்கட்டும்; **पितेव** - உனது தந்தைபோல், **त्वं** - நீயும், **पुत्रिणां** - நல்ல புத்ரர்களையுடைய தந்தைகளுக்குள், **धुरि** - முதலில், **स्थेयाः** - இருப்பாய்.

(க-து) "இவ்வாறு நீ, நந்தினியின் அருள் கிடைக்கும்வரை பணிவிடை செய்துவா; உனது காரியம் இடையூறின்றி நிறைவேறுவதாக; உனது தந்தை, ஸத்புத்ரர்களையுடைய தந்தையர்களில் முதல்வனாக இருந்தான். நீயும் அவ்வாறு ஸத்புத்ரனை யடைந்து சிறந்து இருப்பாய் என்பது எனது ஆசீர்வாதம்."

तथेति प्रतिजग्राह प्रीतिमान् सपरिग्रहः ।
आदेशं देशकालज्ञः शिष्यः शासितुरानतः ॥ ९२ ॥

**देश-काल-ज्ञः** - இடத்தையும் காலத்தையும் அறிந்தவனும், **प्रीतिमान्** - பிரீதியடைந்தவனும், **शिष्यः** - சிஷ்யனுமான அரசன், **सपरिग्रहः** - மனைவியுடன் கூடியவனாகவும், **आनतः** - வணக்கமுடையவனாகவும் இருந்துகொண்டு,

**शासितुः** - குருவின், **आदेशं** - கட்டளையை, **'तथा' इति** - அவ்வாறே என, **प्रतिजग्राह** - ஏற்றுக்கொண்டான்.

(க-து) குரு அமர்ந்திருந்த இடம் பரிசுத்தமான ஹோமாக்னிக்கு அருகில் இருந்தது. ஹோமம் செய்தபின் அவர் பேசியிருக்கின்றார். இவ்வாறு அவர் இருந்த இடமும் பேசிய நேரமும் மிகவும் பரிசுத்தமானவைகளாதலால் அவர் கூறியது நிச்சயம் பலனை அளிக்கும் என அரசன் உணர்ந்து சந்தோஷத்துடன் அவர் கூறியதை ஏற்றுக்கொண்டான். அவனுடைய மனைவியும் தனது சம்மதத்தைத் திலீபன் மூலம் தெரிவித்தாள்.

अथ प्रदोषे दोषज्ञः संवेशाय विशांपतिम् ।

सूनुः सूनृतवाक् स्रष्टुः विससर्जोदितश्रियम् ॥ ९३ ॥

**अथ** - பிறகு, **दोषज्ञः** - அறிந்தவரும், **सूनृतवाक्** - உண்மை அன்பு இவைகளோடு கூடியவார்த்தை யுடையவரும், **स्रष्टुः** - பிரம்மதேவரின், **सूनुः** - புதல்வருமான வஸிஷ்டர், **उदितश्रियं** - தோன்றிய (முக) சோபையுடைய, **विशांपतिं** - அரசனை, **संवेशाय** - தூங்குவதின்பொருட்டு, **प्रदोषे** - முன்னிரவிலேயே, **विससर्ज** - அனுப்பினார்.

(க-து) உண்மையும் பிரியமுமான வார்த்தை [illegible] சிறந்த அறிவாளியான வஸிஷ்ட முனிவர், பிரயாணத்தினால் உண்டான சிரமம் தீரவேண்டியதைக் கருதி அரசனை முன்னிரவிலேயே தூங்குவதற்கு அனுப்பினார். அரசனது முகம் காரியஸித்தியை எண்ணி, புதிய சோபையுடன் விளங்கியது.

सत्यामपि तपःसिद्धौ नियमापेक्षया मुनिः ।

कल्पवित् कल्पयामास वन्यामेवास्य संविधाम् ॥ ९४ ॥

**कल्पवित्** - [illegible] முறையறிந்த, **मुनिः** - முனிவர், **तपः सिद्धौ** - தவத்தினால் கிடைத்த சக்தி, **सत्यामपि** - இருந்தபொழுதும், **नियम अपेक्षया** - விரதத்தில் விருப்பத்தினால், **अस्य** - அவ்வரசனுக்கு, **वन्यां** - காட்டில் உண்டான பொருள்களினாலான, **संविधां एव** - ஏற்பாடுகளையே, **कल्पयामास** - அமைத்தார்.

(க-து) வஸிஷ்டர் விரதமனுஷ்டிக்கவேண்டிய முறைகளை அறிந்தவர். ஆதலால் அவர், திலீபன் அப்பொழுது முதற்கொண்டே விரத மனுஷ்டிக்க வேண்டுமென எண்ணி, தமது தவத்தின் பலத்தினுல் நல்ல ஏற்பாடுகளைச் செய்யலாமாயினும், அவ்வாறு செய்யாமல் தர்ப்பத்தினுலான படுக்கை முதலியவைகளையே அவனுக்குக் கொடுத்தார்.

निर्दिष्टां कुलपतिना स पर्णशालाम्
अध्यास्य प्रयत-परिग्रह-द्वितीयः ।
तच्छिष्याध्ययन निवेदितावसानाम्
संविष्टः कुशशयने निशां निनाय ॥ ९५ ॥

महाकवि श्रीकालिदासकृतौ रघुवंशे प्रथमः सर्गः

**प्रयत - परिग्रह - द्वितीयः** - விரதமுடைய மனைவியுடன் கூடிய, **सः** - அவ்வரசன், **कुलपतिना** - முனிவர்களின் கூட்டத்திற்குத் தலைவரான வஸிஷ்டரால், **निर्दिष्टां** - காண்பிக்கப்பட்ட, **पर्णशालां** பர்ணசாலையில், **अध्यास्य**- இருந்து, **कुशशयने**- தர்ப்பத்தினுலான படுக்கையில், **संविष्टः** - தூங்கியவனாக, **तच्छिष्य-अध्ययन निवेदित, अवसानां** - வஸிஷ்டருடைய சிஷ்யர்களின் அத்யயனத்தினுல் அறிவிக்கப்பட்ட முடிவையுடைய, **निशां** - இரவை, **निनाय** - போக்கினுன்.

(க-து) திலீபன் மனைவியுடன் இரவில் பர்ணசாலையில் இருந்தான். இரவு முடிந்து பொழுது புலரும் நேரமாயிற்றென்பதை வஸிஷ்டரின் சிஷ்யர்களுடைய வேதாத்யயன ஓசையிலிருந்து அறிந்து எழுந்தான்.

வஸிஷ்டரின் மாணவர்கள் ஸூர்யோதயத்திற்கு முன்பே எழுந்து வேதம் ஓதுவது வழக்கம். அவர்கள் வேதாத்யயனம் செய்தது, பொழுது விடியும் நேரத்தை அவனுக்கு அறிவித்தது.

ரகுவம்சத் தமிழுரையில் முதல் ஸர்க்கம் முற்றும்.

---